RE/MAX BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710



மலர்:- 29, 06 ஜனவரி 2023 இதழ்:- 37

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600


## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!


## என் நலனை விட "என் இன" நலனை ஆதரியுங்கள்!

### சம்பந்தரின் நலன் விசாரிக்க சென்ற மகிந்தாவிடம் கோரிக்கை



என் உடல் நலம் குறித்து விசாரிக்க வந்த உங்களுக்கு நன்றி. என் நலனை விட என்னுடைய இனத்தின் நலனுக்காக தீர்வு விடயத்தை ஆதரியுங்கள். நிச்சயம் வரலாற்றில் இடம் பெறுவீர்கள். வடக்கு மற்றும் கிழக்கில் தமிழர்கள் எதிர் நோக்கியுள்ள தேசியப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட (3ம் பக்கம் பார்க்க)

## தீர்வு காணும் விடயத்தில் இயலாத்தன்மை வருமாயின் சுதந்திர தினத்தில் பகிரங்கமாக அறிவிப்பேன் - ரணில்



நாட்டு மக்களில் எந்தவொரு தரப்புக்கும் பாதகம் இல்லாத வகையில் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு நிரந்தர அரசியல் தீர்வைக் காண்பது தான் எனது இலக்கு தீர்வைக் காண்பதற்கான பேச்சுப் பயணம் இந்தப் புத்தாண்டில் வெற்றிகரமாக நடைபெறும் என்று. நம்புகின்றேன். தீர்வு காணும் விடயத்தில் இயலாத்தன்மை வருமாயின் அதை எதிர் வரும் சுதந்திர தினத்தில் நாட்டு மக்களுக்கு பகிரங்கமாக அறிவிப்பேன். *7ம் பக்கம் பார்க்க)

**பிந்திய செய்தி**

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் நேற்று ஜனாதிபதி ரணில் வழங்கிய உறுதிமொழி!



வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு இடையில் தற்போது காணப்படும் அதிகாரங்களை செயற்படுத்துவற்கு செய்ய வேண்டிய (6ம்பக்கம் பார்க்க)





NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக
உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE


THINKING OF
SELLING OR BUYING A HOME?
Siva Kandiah
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com
Team SIVA
WILL BRING THE BEST RESULTS!
Piravien Siva
B.Comm.
Sales Representative
Dir: 647-221-5220
piravien@gmail.com
20 Years Real Estate Experience
HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
HOMELIFE
HIGHER STANDARDS
Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT
• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY
WISHING YOU AND YOUR FAMILY A JOYFUL
Holiday Season and a Prosperous year 2023
Thank you to all of my clients, family, and friends for trusting me with your
Real Estate needs during the last 20 years.
I hope to continue working with you in the future.
Mississauga /Sandalwood
Brampton $677,000
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept Kitchen
Dixie & Clark
SOLD
Brampton $539,900
Bedrooms: 3 Washrooms: 2
Beautiful Corner Unit! Upgraded
Sheppard & Warden
SOLD
Scarborough $595,900
Bedrooms: 2+1 Washrooms: 2
Renovated Suite, Open Balcony
Mccowan/Hwy 401
Scarborough $599,900
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept Suite, Laminate Fl
Eglinton & Mccowan
SOLD
Scarborough $620,000
Bedrooms: 3+1 Washrooms: 2
Location Location Location!!!
Birchmount & Enterprise
Markham $699,900
Bedrooms: 1+1 Washrooms: 1
Modern Open Concept Kitchen
Sandalwood Pkwy/Hurontario
SOLD
Brampton $839,000
Bedrooms: 3 Washrooms: 2
Location Location
Simco St N/ Darcy
Oshawa $998,000
Bedrooms: 3+1 Washrooms: 4
Fully Renovated Home
Williams Pkwy/James Potter
Brampton $1,699,900
Bedrooms: 4+2 Washrooms: 4
Upgraded Large Kitchen
Markham & Major Mackenzie
Markham $1,649,000
Bedrooms: 4+2 Washrooms: 4
Approx 3,450 Of Living Space
Salem / Taunton
SOLD
Ajax $1,189,800
Bedrooms: 4+1 Washrooms: 4
Location Location Location!
Don Mills/Eglinton
SOLD
Scarborough $549,900
Bedrooms: 3 Washrooms: 2
Location! Location! Location!
PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# என் நலனை விட "என் இன" நலனை ஆதரியுங்கள்!

## சம்பந்தரின் நலன் விசாரிக்க வீடு தேடிச் சென்ற மகிந்தாவிடம் கோரிக்கை



என் உடல் நலம் குறித்து விசாரிக்க வந்த உங்களுக்கு நன்றி. என் நலனை விட என்னுடைய இனத்தின் நலனுக்காக தீர்வு விடயத்தை ஆதரியுங்கள். நிச்சயம் வரலாற்றில் இடம் பெறுவீர்கள். வடக்கு மற்றும் கிழக்கில் தமிழர்கள் எதிர் நோக்கியுள்ள தேசியப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், நலம் விசாரிக்கச் சென்ற முன் னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ விடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்நிலையில், வடக்கு மற்றும் கிழக்கு தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பில் தான் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் கலந்துரையாடல் களை நடத்தி, சுமுகமான தீர்வை பெற் றுக் கொடுக்க முயற்சிப்பதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இரா. சம்பந்தனிடம் உறுதியளித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை வர் இரா.சம்பந்தனின் உடல் நலம் விசாரிப்பதற்காக அவரது வீட்டிற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ 04 ஜனவரி 2023 விஜயம் செய்துள்ளார். இதன்போதே, இரா.சம்பந்தன் மேற்படி கோரிக்கையை மஹிந்த ராஜபக்ஷவிடம் விடுத்துள்ளார்.

இதேவேளை, தமிழர் பிரச்சினை தொடர் பில் கலந்துரையாடல்களை நடத்துவத ற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மூன்று நாள் சர்வகட்சி மாநாட்டில், தமது கட்சி யான பொதுஜன பெரமுனவும் கலந்து கொள்ளும் என மஹிந்த ராஜபக்ஷ இதன் போது கூறியுள்ளார்.

# இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டித் தீர்வு! மட்டக்களப்பில் மாபெரும் மக்கள் போராட்டம்!



சிறிலங்கா அதிபருடன் முன்னெடுக்கப் படும் பேச்சு வார்த்தைகளில் தமிழ் கட்சி களை ஒன்றிணையுமாறு கோரி மட்டக் களப்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக 05 ஜனவரி 2023 ஒன்று கூடிய மக்கள், தமிழ் மக்களின் தீர்வு விடயத்தில் தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றி ணைந்த செயற்பாடுகளை முன்னெடுப்ப தன் மூலமே தமிழ் மக்களுக்கான தீர்வினை பெற்றுக் கொடுக்க முடியும் எனத் தெரிவித்து இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. வடகிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இந்த போராட்டம் நடைபெற்றது. இந்த போராட்டத்தின் போது, தமிழ் கட்சி களின் ஒன்றிணைவு மற்றும் இணைந்த வடகிழக்கில் தமிழ் மக்களுக்கான சமஸ்டி தீர்வு குறித்து வலியுறுத்தப் பட்டது.

இந்த போராட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து கலந்துகொண்ட பெருமள விலான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்ட னர் . இதன்போது பல்வேறு சுலோகங் கள் எழுதிய பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சிவில் அமைப்புகள் பாதிக்கப்பட்ட மக்கள் கல்விமான்கள் மகளிர் அமைப்பு கள் உட்பட பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள் இந்த போராட்டத்தில் ஈடு பட்டனர். ஐக்கிய இலங்கைக்குள் ஒருங் கிணைந்த வடகிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத சமஷ்ட்டி தீர்வினை வலியுறுத்துவதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைவு செய்வோம் என்னும் தலைப்புகளில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடகிழக்கு மாகாண ஒருங்கிணைப்பு குழுவின் பிரதிநிதிகள் உட்பட பல்வேறு. பட்ட அமைப்புகள் இந்த போராட்டத் தில் கலந்து கொண்டமை குறிப்பிடத் தக்கது.

இதேவேழள இலங்கை வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் நாவற்குழியில் போராட்ட மொன்று இடம் பெற்றது. 05 ஜனவரி 2023 வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் ஏ9 வீதியின் நாவற்குழி சந்தியில் ஒன்றுகூடிய போராட்டக்காரர் கள் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெற முடியாத சம்ஷ்டியை வலியுறுத்து வதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் ஓரணியில் திரளச்செய்ய ஒன்றிணைவோம் என வலியுறுத்தி குறித்த போராட்டம் முன்னெடுக்கப் பட்டது. வடக்கு கிழக்கு மாகாணங் களிலுள்ள 8 மாவட்டங்களிலும் ஒரே நேரத்தில் கவனயீர்ப்பு மேற் கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டது.

### ரணில் – தமிழ்த்தரப்பு சந்திப்பு!

பத்திரிகை அச்சுக்குப் போகும் வேளை தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு பேச்சு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை 05 ஜனவரி 2023 மாலை சந்திப்பு ஒன்றுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அழைப்பு விடுத்து ள்ளார்.

இந்தச் சந்திப்பில் பங்கேற்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட்டின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோருக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க (22ம் பக்கம் பார்க்க)

**உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்**
**30வது ஆண்டு விழா:-**
**23 ஏப்ரல் 2023**
**"சங்கீத சங்கமம் 2023"**

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்,
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544

# பரந்துபட்ட கூட்டமைப்பை உருவாக்க வலியுறுத்தி சம்பந்தர் மாவை ஆகியோருக்கு ரெலோ, புளொட் தலைவர்கள் கடிதம்!

தற்போதைய காலத்தின் தேவையை உணர்ந்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பரந்து பட்ட அமைப்பாக மாற்ற வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலை வர் மாவை.சோ.சேனாதிராஜா ஆகியோ ருக்கு ரெலோ மற்றும் புளொட் தலை வர்களால் கடிதம் அனுப்பி வைக்கப் படவுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்துக்கு முன்னதாக இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்படும் என்று நம்பகரமாகத் தெரியவருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நிர்வாக ரீதியாக வலுப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் இந்தக் கடிதத்தில் முன் வைக்கப்பட்டவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான பொதுச் சின்னம் மற்றும் கட்சிப் பதிவு தொடர்பிலும் சுட்டிக்காட்டப்படவுள் ளது. மேலும், தமிழ்த் தேசியப் பரப்பிலு ள்ள அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து ஓரணியாகக் கூட்ட மைப்பை விரிவுபடுத்தி பயணிக்க வேண்டும் என்றும், அதற்கான அனை த்து முயற்சிகளையும் எடுக்கவேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் வலியுறுத்த ப்படவுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பிய கடிதம், ஐ.நா.மனித உரிமை கள் பேரவைக்கு அனுப்பிய கடிதம், ரணில் அரசின் சர்வ கட்சிக் கூட்டத்தில் நிலைப்பாடு எடுக்கும் விவகாரம் என அனைத்து விடயங்களிலும் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒற்றுமையாகச் செயற் பட்டுள்ள நிலையில் அதனைத் தொட ர்ந்து ஒன்றித்து ஓரணியாக ஒரே கூட்ட மைப்பாகக் கொண்டு செல்ல வேண்டி யதன் தேவைப்பாடு குறித்தும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்படவுள்ளது.



மேலும் உருவாக்கப்படும் கூட்டு தனித் துத் தேர்தலுக்காக மாத்திரம் இல்லாமல் தொடர்ந்தும் அது அவ்வாறானச் செயற்பட வேண்டும் என்றும் கடிதத்தில் சுட்டிக் காட்டப்படவுள்ளது எனவும் தெரிய வருகின்றது.


இதேவேளை இலங்கையில் நடைபெற வுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுமாறு கோரப்பட் டால் அது குறித்து தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி கலந்தாலோசிக்கும் என அதன் பங்காளிக் கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். எனினும் தமது கட்சி இணைவது தொடர்பில் மாவை சேனாதிராஜா தலைமையிலான இலங்கை தமிழரசு கட்சிக்கு விருப்பமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அரகலயவை அழிக்க ரணிலை ஆயுதமாக பயன்படுத்தினோம்

அரகலய மக்கள் இயக்கத்தை அழிப்பத ற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு கருவியாக கொண்டு வரப்பட்ட தாக இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த இராஜ் வீரரத்னவுக்கு அளித்த சர்ச்சைக்குரிய நேர்காணலில் தெரிவித் துள்ளார். காலி முகத்திடலில் உள்ள 'கோட்டா கோ ஹோம்' தளத்தில் நிராயுதபாணியான ஆர்ப்பாட்டக்காரர் களைத் தாக்கிய கும்பலை வழிநடத்தி யதற்காக விசாரணைக்கு உட்படுத்தப் பட்ட நிஷாந்த இந்த நேர்காணலின் போது விக்கிரமசிங்க பொது எதிர்ப்பு இயக்கமான 'அரகலய'க்கு பதிலளிக்கும் வகையில் ஜனாதிபதியாக நியமிக்கப் பட்டார் என தெரிவித்தார். ஒரு குறிப் பிட்ட காரணத்திற்காக நாங்கள் அவரை அழைத்து வந்தோம். 'அரக லய' மக்கள் இயக்கத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காக ரணிலை ஜனாதிபதியாக நியமித்தோம். நன்றாகப் போய்க் கொண்டிருக்கிறது. 'அரகலய' மீது தாக்குதல் நடத்தவே அவர் நிய மிக்கப்பட்டார்'' என சனத் நிஷாந்த தெரி வித்தார். மேலும் அவர் ரணில் விக்ரமசிங்கவை தற்காப்புக்காக வைத் திருந்த ஆயுதத்துடன் ஒப்பிட்டார். ஒரு நபர் ஒரு வெடிமருந்து அல்லது துப்பாக்கியை வைத்திருப்பது அதைக் கவனிப்பதற்காக அல்ல, அவசர காலத் தில் அதைப் பயன்படுத்துவதற்காக. அதைத் தான் ரணில் விக்கிரமசிங்கவை வைத்தி செய்தோம். 'அரகலய' வை முடிவுக்கு கொண்டு வர அவர் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டார்,'' என்று அவர் விளக்கினார்.

2023ஆம் ஆண்டு நாட்டிற்கான தமது பொறுப்புகளில் இருந்து எந்தவொரு தனிநபரும் தட்டிக்கழிக்க முடியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலக ஊழியர்கள் மத்தி யில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.


ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

**ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்**

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin



| ஆலயம் திறந்திருக்கும் நேரம் | பூசை நேரம்: |
|---|---|
| காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை | பகல் 12:00 முதல் மாலை 7:30 |
| மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை | உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம் |

அம்பாள் அடியார்களே!

**கனடா முத்துமாரியம்மன்**

**அங்கத்துவர்களுக்கான வருடாந்த மகாசபை கூட்டம்.**

22 ஜனவரி 2023 ஞாயிற்றுக்கிழமை கனடா முத்துமாரியம்மன் கலாச்சார மண்டபத்தில் மாலை 2.00 மணிக்கு நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.அங்கத்தவர்கள் அனைவரும் மாதாந்த சந்தா பணத்தை செலுத்துமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**14 ஜனவரி 2023 சனிக்கிழமை பகல்:- தைப்பொங்கல்**

விஷேட பூஜை காலை 10.00 மணிக்கு நடைபெறும் .

உபயம்: பொன். சிவா சந்தானலஷ்மி குடும்பம்.

**14 ஜனவரி 2023 சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு**

ஐயப்பன் மகரஜோதி தரிசனம் நடைபெறும்

உபயம்: மதிவண்ணன் மகாலிங்கம் குடும்பம் .

**21ஜனவரி 2023 சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு**

அபிராமி பட்டர் விழா

உபயம்: இராஜ. முகுந்தன் சதுர்ஜன்

**24 ஜனவரி 2023 செவ்வாய்கிழமை (11வது வருடம்)**

காலை 10 மணிக்கு 1008 சங்காபிஷேகம்.

**24 ஜனவரி 2023 செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிக்கு**

திருவுஞ்சல் மணவாள கோலம்.

உபயம்: வெ. சதானந்தவடிவேல் குடும்பம் .

சி. லிங்கராஜா குடும்பம் .

சா. முரளி குடும்பம் .

மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும். அனைவரும் வருக! அம்பாள் அருள் பெறுக!

**இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்**

# மனைவியுடன் பரிதவிக்கும் கோத்தா! கருணை காட்டுமா அமெரிக்கா?

அமெரிக்காவில் மீண்டும் குடியுரிமை பெற்றுக் கொள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ முயற்சித்து வருவதாக இந்தியாவில் இரு ந்து வெளிவரும் தெ இந்துஸ்தான் டைம்ஸ் ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

தற்போது குடும்பத்துடன் டுபாயில் தங்கியுள்ள கோட்டாபய அங்கிருந்து அமெரிக்கா செல்லும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்.

அமெரிக்க குடியுரிமையை மீள வழங்குமாறு அமெரிக்க வெளியுறவுத்துறையிடம் தனது வழக்க றிஞர்கள் மூலம் கோட்டாபய வேண்டுகோள் விடுத் துள்ளார்.

2019ஆம் இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் நோக்கில் அமெரிக்க குடியுரிமையை நீக்கியிருந்தார். இந்நிலையில் அதனை மீண்டும் பெற்றுக்கொள்ள கோட்டாபய முயற்சித்து வரும் நிலையில் அமெரிக்க அதிகாரி களால் இன்னும் பரிசீலிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தின் போது இலங்கையில் இருந்து தப்பிச் சென்ற பொது எந்தவொரு நாடும் புகலிடம் வழங்கத் தவறியதையடுத்து, தனது அமெரிக்க



குடியுரிமையை மீட்டெடுக்குமாறு கோத்தபய ராஜபக்ச வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அமெரிக்க குடியுரிமைக்கான கோட்டபாயவின் முயற்சிகள் இன்னும் வெற்றிபெறவில்லை என்பதை அமெரிக்க தூதரகத்தின் ஆதாரம் உறுதிப்படுத்தி யுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதேவேளை, தற்போது துபாயில் தங்கியிருக்கும் கோட்டாபய ராஜபக்ஷ, இன்று வெள்ளிக்கிழமை 6ஆம் திகதியன்று இலங்கை திரும்பவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# சுற்றுலா விசாவில் வெளிநாடு சென்ற அனைத்துப் பெண்களையும் கறுப்புப் பட்டியலில் சேர்க்கத் தீர்மானம்




சுற்றுலா வீசாவில் சட்டவிரோதமாக வெளிநாடுகளு க்குச் சென்ற அனைத்து பெண்களையும் கறுப்புப் பட்டியலில் சேர்க்கத் தீர்மானித்துள்ளதாகவும், அவர் களுக்கு எதிராக பணியக சட்டத்தின் விதிகளின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கவும் தீர்மானித்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. பணியகம் விடுத்துள்ள அறிக்கை யில் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, ஓமானில் உள்ள இலங்கைத் தூதரகத் தின் கீழ் உள்ள சுரக்ஷா விடுதியில் தங்கியுள்ள இலங் கைப் பெண்களை நாடு திரும்பும் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை வெளி நாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. கடந்த 24ஆம் திகதி முதல் 8 பெண்களைக் கொண்ட குழு இலங்கை வந்தடைந்ததாகவும், மேலும் 6 பெண் கள் இலங்கைக்கு செல்லஉள்ளதாகவும் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.

தூதரகத்தால் பணியகத்தில் சட்டப்பூர்வமாக பதிவு செய்யப்படாத சுற்றுலா வீசாக்களுடன் ஓமனுக்கு வேலைக்குச் சென்ற 18 பேர் சிக்கித் தவிப்பதாகவும் அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. அவர்கள் பணிபுரிந்த பணியிடத்தில் இருந்து தப்பிச் சென்றதால் அவர்களது பெயர்களும் தொழிலாளர் அமைச்சகத்தால் கருப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

எனவே, அவர்களை அந்தந்த முதலாளிகளின் அனு மதியுடன் இலங்கைக்கு அழைத்துவர தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், சட்ட விரோதமாக நாட்டில் தங்கியுள்ளவர்கள் குழுவாக இருப்பதால், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் இலங்கைக்கு வருவதற்கு விமான டிக்கெட்டுகளை வழங்க வேண்டும் எனவும் வெளிநாட்டு வேலைவாய் ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

# உலக பொருளாதாரத்திற்கு 2023 மிகக் கடினமான ஆண்டாக இருக்கும்?

கடந்த ஆண்டை விட 2023 ஆம் ஆண்டு முழு உலகிற்கும் மிகவும் கடினமான ஆண்டாக இருக்கும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் பிரதானி கிறிஸ்டலினா ஜியோஜிவா கூறுகிறார்.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சீனாவின் மெதுவான வளர்ச்சியே இதற்கு காரணம் என்று அவர் செய்தியாளர் சந்திப்பொன்றில் கூறியுள்ளார்.

உக்ரைன் போர் மற்றும் அதிக வட்டி வீதங்கள் காரணமாக உலகப் பொருளாதார வளர்ச்சி 2.7 சத வீதம் என்று கடந்த ஒக்டோபர் மாதம் சர்வதேச நாணய நிதியம் அறிவித்தது.

மேலும், உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார த்தை கொண்டுள்ள சீனா, தனது கொரோனா சுகாதாரக் கொள்கைகளைத் தளர்த்தியதையடுத்து, பாதிக்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதனால் 40 ஆண்டுகளுக்குப் பிறகு முதல்முறையாக



பொருளாதார வளர்ச்சி வீதம் குறைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். உக்ரைன் போரினால் ஐரோப்பிய ஒன்றியத்தின் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப் பட்டுள்ள நிலையில் கடுமையான பொருளாதார மந்த நிலைக்கான அறிகுறிகள் தென்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

**உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்**
**30வது ஆண்டு விழா:- 23 ஏப்ரல் 2023**
**“சங்கீத சங்கமம் 2023”**

# அனைவரையும் எவ்வாறு திருப்திப்படுத்துவது?

ரணில் விக்கிரமசிங்க அனைவரையும் திருப்திப் படுத்தக்கூடியதோர் அரசியல் தீர்வை இந்த ஆண்டில் காணப் போவதாகக் கூறுகின்றார். அதாவது தமிழரையும் திருப்திப்படுத்த வேண்டும் முஸ்லிம் களையும் திருப்திப்படுத்த வேண்டும் சிங்களவர் களையும் திருப்திப்படுத்த வேண்டும் பௌத்த மகா சங்கத்தினரையும் திருப்திப்படுத்த வேண்டும்.

அத்துடன் தென்னிலங்கையிலுள்ள சிங்கள அடிப் படைவாதிகளையும் திருப்திப்படுத்த வேண்டும். இது எவ்வாறு சாத்தியப்படும்? இலங்கையின் அரசியல் வரலாற்றில் இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் தீர்வுக்கான அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்திருக்கின்றன. தென்னிலங்கையின் சிங்கள தரப்புக்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் தான் அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்திருக்கின றன.

இவ்வாறானதொரு நிலையில், பொருளாதார நெருக் கடியினால் அதிகாரத்துக்கு வரநேர்ந்த ரணில் விக்கிரமசிங்க, அனைத்து தரப்புக்களையும் திருப்திப் படுத்தப் போவதாகக் கூறுவது விசித்திரமான ஒன்றாகவே இருக்கின்றது.

நீண்டகால அரசியல் கோரிக்கைகளின் அடிப்படை யில் தமிழ்மக்களை திருப்திப்படுத்துவதாயின் வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டி அடிப்படையிலான அரசியல் ஏற்பாடொன்றை வழங்குவதற்கு ரணில் முன்வர வேண்டும். இது ஒன்றுதான் தமிழ் மக்களை திருப்திப்படுத்தக்கூடியது. ஆனால் இதனை முஸ்லிம் களும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை சிங்களவர் களும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை பௌத்த மகா சங்கங்களும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. சிங்கள அடிப்படைவாத தரப்புக்கள் தங்களை ஒருங்கிணை ப்பதில் பலவீனமாக இருந்தாலும் கூட, நிச்சயம் தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்துவர்.

ஒருவேளை ரணில் விக்கிரமசிங்க தேர்தல் ஆர்வம் இல்லாதவராக இருந்தால், துணிவாக சில விடயங் களை முன்னெடுக்க முடியும். ஆனால், அவ்வாறு தெரியவில்லை. இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மக்களால் தெரிவு செய்யப்பட்டதொரு ஜனாதிபதியாக வந்து விட வேண்டுமென்னும், தனது நீண்டகால அரசியல் கனவை எப்படியாவது பூர்த்தி செய்துவிட வேண்டுமென்னும் முனைப்பு அவரிடம் இருக்கின்றது. அவ்வாறானதோர் இலக்குடனேயே ரணில் ஒவ்வொன்றையும் திட்டமிடுகிறாரென்றே தெரிகின்றது.

இந்த நிலையில், தமிழ் மக்களையும் ஏனையவர் களையும் அரசியல் தீர்வு விடயத்தில் திருப்திப்படு த்தலாமென்பது நடைமுறைக்கு சாத்தியமான ஒன் றாக இல்லை. தென்னிலங்கையின் பேச்சுகள் ஒவ் வொன்றின் இறுதி விளைவும் தமிழர்களுக்கு எதிராகவே இருந்திருக்கின்றது. அரசியலமைப்பி லுள்ள 13ஆவது திருத்தத்திலுள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைக் கூட அமுல்படுத்துவதில் தென்னிலங்கை தரப்புக்கள் மத்தியில் இன்னும் உடன் பாடு ஏற்படவில்லை. இந்த நிலையில் 13இலுள்ள விடயங்களிலேயே அனைவரையும் திருப்திப்படுத்து வது என்பதே மிகவும் சிக்கலாகத் தெரிகின்றது.

இந்த நிலையில் 13இற்கு அப்பால் செல்வதில் எவ்வாறு அனைவரையும் திருப்திப்படுத்திக் கொண்டு முன்நகர்வது? அரசியல் தீர்வுக்கான நகர்வில் ரணில் உண்மையாக இருப்பது உண்மை யாயின் சில தரப்புக்களை பகைத்துத் தான் ஓர் உறுதியான தீர்வை காணமுடியும்.

இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெளிவாகவும் உறுதியாகவும் இருக்க வேண்டும். ஏனெனில், இறுதியில் அனைவரையும் திருப்திப்படுத் தும் முயற்சியில் மீளவும் தமிழ் மக்களுக்கே நாமம் போடப்பட்டு விடலாம்.

எனவே, கூட்டமைப்பு ஒன்றில் உறுதியாக இருக்க வேண்டும். அதாவது, இறுதியான அரசியல் தீர்வு பற்றி இப்போது பேசமுடியாது. அதற்கு முன்பதாக அரசியலமைப்பில் இருப்பதை நடைமுறைப்படுத்து ங்கள். அதன் பின்னர் அடுத்த கட்டத்தை பார்ப்போம். இந்தவிடயத் தின் மீதான உறுதியை கூட்டமைப்பு தளர விடு மானால், மீண்டும் ஏமாற்றமே கிட்டும்

# 7 இலட்சம் சுற்றுலா பயணிகள் இலங்கை சென்றுள்ளனர்!

2022ஆம் ஆண்டில் மொத்தம் 7 இலட்சத்து 19 ஆயிர த்து 978 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு சென்று ள்ளனர். இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை யினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக டிசம்பர் மாதத்தில் 91 ஆயிரத்து 961 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு சென்றுள்ளனர்.

பிந்திய செய்தி

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் நேற்று ஜனாதிபதி ரணில் வழங்கிய உறுதிமொழி!



வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு இடையில் தற்போது காணப்படும் அதிகாரங்களை செயற்படுத்துவற்கு செய்ய வேண்டிய விடயங்கள் குறித்து நேற்றைய அதிபருடனான சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பரிசீலித்து எதிர் வரும் 10 ஆம் திகதி முடிவை அறிவிப்பதாக அதிபர் உறுதியளித்ததாக, சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

சிறிலங்காவின் 75 ஆவது சுதந்திர தினத்திற்கு முன்னர் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து அதிபர் ரணில் விக்ரமசிங்க உறுதியளித்திருந்த நிலையில், அதிபருடன் தமிழ்க் கட்சிகள் கலந்துரையாடல்களை மேற் கொண்டு வருகின்றன.

இதன்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூன்றாவது தடவையாக நேற்று அதிபரை அதிபர் அலுவலகத்தில் வைத்து சந்தித்து கலந்துரையாடியுள்ளது.

நேற்றைய சந்திப்பில் பிரதமர் தினேஸ் குணவர்தன, அமைச்சர்களான விஜயதாச ராஜபக்ச மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்து கொண்டுள்ளதுடன், கூட்டமைப்பு சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

அடுத்த சந்திப்பு ஏனைய தமிழ்க் கட்சிகளையும் உள்ளடக்கி எதிர்வரும் 10 அம் திகதி இடம் பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தமது இறுதி நிலைப்பாடு குறித்து எதிர்வரும் 10 ஆம் திகதி அறிவிக்கவுள்ளதாக தெரிவித்தார்.

இதேவேளை வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் தொடர் கவனயீர்ப்பு போராட்டம் கிளிநொச்சியிலும் முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெற முடியாத சமஸ்டியை வலியுறுத்துவதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் ஓரணியில் இணைய வலியுறுத்தியே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. குறித்த போராட்டம் நேற்று வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் பழைய வைத்திய சாலை முன்பாக இடம்பெற்றது. இதன் போது, பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய பதாதைகளை மக்கள் ஏந்தியிருந்தனர்.

## மதம் மாற்றக் கொள்கை கொண்டவர் அரச அதிபராக வேண்டாம் - யாழில் போராட்டம்





யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் அவர்கள் பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றத்தில் செல்ல இருக்கின்றார். இந்நிலையில் யாழ். மாவட்டத்திற்கு புதிதாக அரசாங்க அதிபர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபராக, மதமாற்ற கொள்கை உடையவர் நியமிக்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளதாக தெரிவித்து, அவரை யாழ். மாவட்டத்திற்கு நியமிக்க வேண்டாம் என தெரிவித்து சிவ சேனை அமைப்பினரால் இன்று யாழ். மாவட்ட செயலகத்தில் முன்றலில் மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'சிவத் துரோகிகள் தமிழ் இனத் துரோகிகள்' உள்ளிட்ட பல வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# தீர்வு காணும் விடயத்தில் இயலாத்தன்மை வருமாயின் சுதந்திர தினத்தில் பகிரங்கமாக அறிவிப்பேன் என்கிறார் ரணில்



நாட்டு மக்களில் எந்தவொரு தரப்புக்கும் பாதகம் இல்லாத வகையில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு நிரந்தர அரசியல் தீர்வைக் காண்பது தான் எனது இலக்கு தீர்வைக் காண்பதற்கான பேச்சுப் பயணம் இந்தப் புத்தாண்டில் வெற்றிகரமாக நடைபெறும் என்று. நம்புகின்றேன். தீர்வு காணும் விடயத்தில் இயலாத்தன்மை வருமாயின் அதை எதிர் வரும் சுதந்திர தினத்தில் நாட்டு மக்களுக்கு பகிரங்கமாக அறிவிப்பேன். இதை மட்டுமே. என்னால் இப்போது கூற முடியும். இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். அரசு ஆரம்பித்துள்ள சர்வகட்சி பேச்சு தொடர்பிலும், எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பிலும் ஜனாதிபதியிடம் கொழும்பு ஊடகம் ஒன்று எழுப்பிய பிரத்தியேக கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:-

நாட்டில் இடம் பெறுகின்ற கொலைச் சம்பவங்கள், போதைப் பொருள் கடத்தல் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளைத் தப்பிக்க வைக்கும் வகையில் குறிப்பிட்ட சில ஊடகங்களில் திரிபுபடுத்தப்பட்ட செய்திகள் வருவது போல், அரசு ஆரம்பித்துள்ள அரசியல் தீர்வைக் காண்பதற்கான சர்வகட்சி பேச்சு தொடர்பிலும் முரண்பட்ட தகவல்களை சில ஊடகங்கள் வெளியிடுகின்றன.

நாட்டு மக்களுடைய பிரச்சனைகளுக்கு தீர்வை காணும் பயணத்தில் இப்படியான ஆரோக்கியமற்ற செயல்களில் ஈடுபட வேண்டாம் எனக் குறிப்பிட்ட ஊடகங்களிடம் நான் வேண்டிக் கொள்கின்றேன். நாட்டு மக்களில் எந்தவொரு தரப்புக்கும் பாதகமில்லாத வகையில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு நிரந்தர அரசியல் தீர்வைக் காண்பது தான் எனது இலக்கு. இதை மட்டுமே என்னால் இப்போது கூற முடியும்.

அதிகாரப் பகிர்வு தொடர்பாக சர்வகட்சித் தலைவர்கள் தங்களுக்கு இடையில் ஒன்றுகூடி ஒரு தீர்க்கமான முடிவை விரைந்து எடுக்குமாறு கடந்த சந்திப்பில் கூறி விட்டேன் -என்றார்.

இது இவ்வாறிருக்க அரசியலமைப்பு பேரவைக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை நியமிப்பதில் தொடர்ந்தும் இழுபறிநிலை நிலவுவதாக, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் விசனம் வெளியிட்டுள்ளார்.

அரசியலமைப்பு பேரவைக்கு 7 நாடாளுமன்ற உறுப்பினர்களும், 3 சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் நியமிக்கப் படவுள்ளனர். அவர்களில் தற்போது 5 சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களும், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், எஞ்சிய ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனின் பெயரை தமிழ் தேசிய கூட்டமைப்பு முன்மொழிந்ததுடன், தமிழ்கட்சிகளும் ஆதரவு வழங்கியுள்ளன.

இதற்கு உத்தர லங்கா சபாகய கட்சி எதிர்ப்பு வெளியிட்டதை அடுத்து, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் நியமனமானது இழுபறி நிலையில் உள்ளதாக மனோ கணேசன் குறிப்பிட்டார்.

# தேசிய இனப்பிரச்சனைக்கு நிரந்தரமான தீர்வைப் பெற 5 யோசனைகளை முன் வைக்கிறார் கலாநிதி தயான்ஜயத்திலக

தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வினைக் காண்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்னெடுக்கப்படும் சர்வகட்சி மாநாட்டின் ஊடாக வெற்றி பெறுவதாக இருந்தால் அதில் காணப்படுகின்ற தடைகளை முதலில் இனங்கண்டு களைய வேண்டுமென கலாநிதி தயான் ஜயத்திலக வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் குறித்த தடைகளை களைந்து பேச்சுவார்த்தை முயற்சிகள் வெற்றி பெறுவதற்காக யதார்த்தமாக முன்னெடுக்கப்படக்கூடிய ஐந்தம்ச யோசனைகளையும் அவர் முன்வைத்துள்ளார்.



அந்த யோசனைகளில் முதலாவதாக, 13ஆவது திருத்தச் சட்டம் பற்றிய விவாதம் முடிவுறுத்தப்பட வேண்டும் என்பதோடு, அதற்கமைவாக இறுதி நிலை ஒப்பந்தமானது உச்சநீதிமன்றத்தின் வரையறுக்கப்பட்ட காலப் பகுதியில் (15 ஆண்டுகள் வரை) முழுமையாக அமுலாக்கப்பட வேண்டும் என்ற உத்தரவினைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் ஊடாகவே, இனங்களுக்கு இடையிலான துருவ முனைப்படுத்தலின்றி முழுமையாக நடைமுறைச்சாத்தியமாக்க முடியும்.

இரண்டாவதாக, பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதாக இருந்தால் இந்தியாவினையும் உள்ளீர்த்ததானதொரு கிரமமான அணுகுமுறை அவசியமாகின்றது.

மூன்றாவதாக, மாகாண சபைகள் தற்போதுள்ள நிலைமைகளை விடவும் மேலும் வினைத்திறனாக செயற்படுவதற்கு அனைத்து தரப்பினரும் இணங்குவதோடு அதுபற்றிய விவாதத்தங்கள் நீடித்துச் செல்லாது பூச்சியமாக்கப்பட வேண்டும்.

நான்காவதாக, பொறுபுக்கூறல் குறித்து டெஸ்மண்ட் டி சில்வாவின் அறிக்கையை செயற்படுத்த முடியும். அதே நேரம், போர்க்கால பொறுப்புக்கூறல் தொடர்பிலான விடயங்களை படையினருக்கு பின்னடைவுகளை ஏற்படுத்தும் வகையில் முன்னெடுக்க கூடாது.

ஐந்தாவதாக, பிரஜைகளுக்கு இடையிலான பாகுபாடுகளை எதிர்க்கும் அதே நேரம், சமத்துவமான நிலைமைகளை ஏற்படுத்துவதற்காக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். அத்தோடு, இனப்பாகுபாடு, இனவாதம், மற்றும் சகிப்புத்தன்மை குறைவடைதல் ஆகியவற்றை எதிர்த்துப் போராடுவதற்காக டேர்பன் பிரகடனம் மற்றும் ஐ.நாவின் வழி வரைபடத்தினை பின்பற்ற வேண்டும். மேலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 2008-2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் முன்மொழியப்பட்ட செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதோடு உண்மையான சமத்துவத்தினை அறிவார்ந்த சமூகங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, சிங்கள பேரினவாதத்தின் மீள முடியாத வெற்றியின் அவதாரம் என்று கருதிய கோட்டாபய ராஜபக்ஷ, அரகலவியின் எழுச்சியால் பதவி கவிழ்க்கப்பட்டு வெளியேற்றப்பட்ட படிப்பினை நம்முன்னே உள்ளது. ஆகவே, இனங்களுக்கு இடையிலான துருவப் படுத்தலை தொடர்ச்சியாக வளர்த்துச் செல்லாது அரசியல்தலைவர்கள் இதய சுத்தியுடன் செயற்படுவார்கன் என்று நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கனடாவில் சாதாரண ஊழியர் ஒருவரின் ஆண்டு சம்பளத்தை வெறும் 43 நிமிடங்களில் உழைக்கும் உயர்அதிகாரிகள்!

கனடாவில் ஊழியர் ஒருவர் மிகவும் கடினமாக ஒரு வருடத்தில் உழைத்து பெறும் ஆண்டுச் சம்பளத்தை, அதிகாரி ஒருவர் பணி ஆரம்பித்து 43 நிமிடங்களில் பெற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு பிரதம நிறைவேற்று அதிகாரி போன்ற உயர் பதவி வகிக்கும் அதிகாரிகள் 14.3 மில்லியன் டொலர் வருமானம் ஈட்டுகின்றனர். இதேவேளை, சாதாரண தொழி லாளி ஒருவரின் சராசரி ஆண்டுச் சம்பளம் 58800டொலர்கள் மட்டுமேயாகும்.

இதன்படி, இந்த ஆண்டுக்கான பணி ஆரம்பிக்கப்பட்ட முதல் நாளின் முதல் மணித்தியாலம் கடக்க முன்னதாகவே (விடுமுறை தினமான திங்கட்கிழமை சம்பளத்துடனான கொடுப்பனவு உட்பட) தொழிலாளி ஒருவரின் ஆண்டுச் சம்பளத்தை உயர் அதிகாரிகள் உழைத்துள்ளனர்.

சாதாரண ஊழியர் ஒருவரின் சம்பளத்தை விடவும் உயர் அதிகாரிகள் 243 மடங்கு சம்பளம் ஈட்டுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவில் நிறைவேற்று அதிகார தரத்திலான உயர் அதிகாரிகளுக்கும் சாதாரண தொழிலாளர்களுக்கும் இடையிலான ஊதிய இடைவெளி பல்கிப் பெருகிக்கொண்டே செல்வதாக தெரிவிக்கப்படுக்கின்றது.

கடந்த ஆண்டில் மொன்ட்ரியலை மையமாகக் கொண்ட நிதி நிறுவனமொன்றின் பிரதம நிறைவேற்று அதிகாரியான பிலிப் பெயர், 140.7 மில்லியன் டொலர் வருமானமாக ஈட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 2023இல் ரொறன்ரோவில் பிறந்த முதல் குழந்தை ஈழத்தமிழ் சஞ்ஜித்

ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12:01 மணிக்கு டொரண்டோவில் பிறந்த சஞ்ஜித் என்ற குழந்தை, 2023 ஆம் ஆண்டில் பிறந்த நகரின் முதல் குழந்தைகளில் ஒன்றாகும். நோர்த் யோர்க் பொது மருத்துவமனையில் பிறந்த இந்த குழந்தையை பெற்றெடுத்த ஈழத் தமிழர் மதியழகன் குடும்பத்தை வாழ்த்தி மற்றும் படத்தையும் வெளியிட்டுள்ளது நோர்த் யோர்க் பொது மருத்துவமனை.



# இராணுவத்தினர் வசமுள்ள இந்து ஆலயங்கள் முழுமையாக விடுவிக்கப்பட வேண்டும் - ஆறுதிருமுருகன் கோரிக்கை!



மக்கள் பிரச்சினையை தீர்ப்பதற்காக ஒன்று கூடிய தமிழ்கட்சிகள் அடுத்த தேர்தலை பற்றி சிந்திப்பது வேடிக்கை யாகவுள்ளது என தெரிவித்த கலாநிதி ஆறுதிருமுருகன் அரசாங்கம் அறிவித் துள்ள நல்லெண்ண முயற்சிகளுக்காக மக்களின் பிரச்சினைக்காக ஒன்றுகூடு மாறு வேண்டுகோள் விடுத்தார்.

நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடாத்திய ஊடக சந்திப்பிலே இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கை யில்.

மக்கள் பிரச்சினையை தீர்ப்போம் என ஒன்று கூடி உள்ள பிரதிநிதிகள் அத னைக் கதைக்காது அடுத்த தேர்தலுக்கு யார் யாருடன் கூட்டு சேர்வது எந்த கட்சியுடன் சேர்வது என்பதை கதைக் கிறீர்கள் நீங்கள் பலகட்சியாக இருப் பதை பற்றி மக்களுக்கு அக்கறை இல்லை ஒற்றுமையாக மக்கள் பிரச்சி னையை தீர்க்க வேண்டும். மக்கள் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஒரே குரலாக ஒலிக்க வேண்டும். உங்கள் பிரச்சினை களை ஊடகங்களுக்கு வெளிப்படுத்து வது வேடிக்கையாக உள்ளது. மக்கள் பிரச்சினையை தீர்ப்பதாக இருந்தால் உங்கள் கோபதாபங்களை ஒதுக்கி வைத்து விட்டு மக்களின் அனைத்து பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு முன்வர வேண்டும் . காணிப்பிரச்சினையை விடு விப்பதற்கு ஒன்றாக குரல் கொடுங்கள்.

கடந்த 25 வருடங்களுக்கு மேலாக மக்களின் நிலங்கள் இராணுவத்தினரின் பயன்பாடுகளில் இருக்கின்றன. இந்த காணிகளில் பல இந்து ஆலயங்களும் காணப்படுகின்றன. இந்த ஆலயங்களில் வழிபாடுகளை மேற்கொள்ளுமாறு பல ஆளுநர்களிடம் அதிகாரிகளிடம் அரச தலைவர்களிடம் கோரிக்கை விடுத்தும் பயனலிக்கவில்லை இதற்காக குரல் கொடுத்தும் பலனில்லை.

பல இந்து ஆலயங்களுக்கு அருகா மையில் புதிதாக பௌத்த பகவானை கொண்டு வந்து இருத்தியுள்ளதை நாங்கள் கண்டுள்ளோம். ஆனால் மக்கள் வழிபட விடுமாறு பல கோரிக்கைகள் முன்வைத்த போதும் அதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காத நிலையே காணப்பட்டது .

இத்தகைய நிலையில் தற்போதைய ஆட்சியாளர்களிடமிருந்து நல்லெண்ண முயற்சியாக பல விடயங்கள் இடம்பெற வுள்ளதாக கருத்துக்கள் வெளிவந்து ள்ளது. குறிப்பாக காணிகளை விடிவிற் கவுள்ளதாக ஜனாதிபதி மற்றும் அமை ச்சர்கள் கூறியுள்ளார்கள்.

இது மட்டுமன்றி இராணுவத்தினர் அதிகமாக இருப்பதால் அவர்களை குறைக்க வேண்டும். என்று பகிரங்கமாக தென்னிலங்கையிலே குரல் கொடுத்து வருகிறார்கள்.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இந்து ஆலயங்கள், சித்தர்களின் சமாதி களை சேதப்படுத்தி ,சின்னாபின்னமாக்கி இராணுவத்திற்கான கட்டடங்களை யும், பல மாளிகைகளையும் கட்டி வைத்து ள்ளார்கள். இவற்றின் சாபம் தான் இன்று இலங்கையில் பொருளாதார தடைகளும், நோய்களும் அதிகரித்துள்ளது. இது தெய்வ சாபமாகும். எனவே அனைத்து ஆலயங்களையும் விரைவாக விடுவிக்க வேண்டும்.

இத்தகைய நிலையில் இராணுவ பிடியில் உள்ள மக்களின் காணிகள் இந்து ஆலயங்களை விடுவிற்குமாறு கோரி க்கை விடுக்கின்றேன். இந்த நிலையில் தமிழ் கட்சிகள் ஒற்றுமையாக குரல் கொடுக்க முன்வருமாறு வேண்டுகின் றேன் என்றார்.

# சுமந்திரன் தெரிவித்த கருத்து தவறானது என்கிறார் மாவை



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள மூன்று கட்சிகளுடன் இணைந்தே எதிர் வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்த கருத்து தவறா னது என்று அந்தக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராஜா தெரிவித்துள் ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது ள்ள நிலையிலேயே உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்ளும் என் றும் வெளியில் உள்ள ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடு வதில்லை என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாகவும் நாடாளு மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்தக் கருத்துத் தொடர்பில் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராஜாவிடம் கேட்டபோது தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பில் தற்போதுள்ள கட்சிகள் (தமிழரசு, ரெலோ, புளொட்) வேறு கட்சி களுடன் தேர்தல் உடன்பாட்டுக்குச் செல்வதில்லை என்று இலங்கைத் தமிழர சுக் கட்சியின் அரசியல் குழு முடிவு எதுவும் எடுக்கவில்லை.

அந்தக் கூட்டத்தில் தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது, இது தொடர்பில் மற்றக் கட்சிகளுடன் எவ்வாறு பேச வேண்டும் என்பது குறித்த கருத்து பரிமாற்றங்கள் மாத்திரமே இடம்பெற்றன.

'சூம்' செயலி ஊடாக நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பங்கேற்று விட்டு இடைநடுவில் சென்று விட்டார். தேர்த லில் எவ்வாறு போட்டியிடுவது என்பது தொடர்பில் எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்ட த்தில் தான் முடிவு எடுப்போம்.

தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி யாகத் தனித்துப் போட்டியிடாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவே போட்டியிடும். கூட்டமைப்பின் பங்காளி க்கட்சிகளைத் (தமிழரசு, ரெலோ, புளொட்) தவிர வெளியில் உள்ள ஏனைய மூன்று கட்சிகளையும் (சி.வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி. ஆர்.எல்.எப்., என்.ஸ்ரீகாந்தா தலைமை யிலான தமிழ்த் தேசியக் கட்சி) என்பவற்றை இணைத்துக் கொண்டு தேர்த லைச் சந்திப்பதா என்பது தொடர்பில் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில்தான் முடிவு எடுப்போம்.

இந்த விவகாரம் தொடர்பில் செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), தர்மலிங்கம் சித்தார்த்தன் (புளொட்) ஆகியோர் என்னை வந்து சந்தித்துப் பேசியுள்ளார் கள். அதே வேளை, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் இந்த விவ காரம் தொடர்பில் என்னுடன் வந்து பேசியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் விக்னேஸ்வரனின் வீட்டில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கட்சிகளின் சந்திப்பின் போதும் தேர்தல் உடன்பாடு தொடர்பில் பேசியுள்ளோம். எனினும், தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில்தான் தேர்தல் உடன்பாடு தொடர்பில் முடிவு எடுப் போம் என்று மேற்படி மூன்று சந்திப்புக் களிலும் நான் திட்டவட்டமாகத் தெரி வித்தேன்.

இந்த விவகாரத்தை நாம் மிகவும் பக்குவமாகக் கையாள வேண்டும். அவசரப்பட்டு கருத்துக்களை எவரும் வெளியிடக் கூடாது எனவும் தெரிவித் துள்ளார்.

# சுமந்திரன் தெரிவித்த கருத்துச் சரியானது!
## தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர் தெரிவிப்பு



மாவை.சேனதிராஜா கருத்து வெளியிட் டதை அடுத்து அக்கூட்டத்தில் பங்கே ற்ற கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் அதற்கு பதிலளிக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அதனடிப்படையில், அடுத்த உள்ளூரா ட்சி மன்றங்களுக்கான தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 3 கட்சிகள் மட்டுமே இணைந்து போட்டியிடுவ தான தீர்மானம் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்க ப்பட்டமை உண்மை தான் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், உள்ளூராட்சி மன்றங்களு க்கன தேர்தல் வந்தால் தமிழரசுக் கட்சி மட்டும் தனித்து போட்டியிடுவதா என்ற விடயம் ஆராயப்பட்ட போதே இந்த விடயமும் தீர்மானமாக கூறப்பட்டது.

அதாவது தமிழ் அரசுக் கட்சி மட்டும் அல்ல தமிழரசுக் கட்சி உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக் கும் 3 கட்சிகளுடன் மட்டும் கூட்டு ணைந்து போட்டியிடுவதாகவே தீர்மா னிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் தலைவர் மாவை. சேனாதிராஜாவுடன் நான், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், சி.சிறிதரன், இ.சாணக்கியன் மற்றும் கட்சியின் பதில் செயலாளர் ப.சத்தியலிங்கம், கொழும்புக்கிளைத் தலைவர் கே.வி.தவராசா, திருகோண மலை மாவட்ட கிளைத் தலைவர் எஸ். குகதாசன், கட்சியின் நிர்வாகச் செயலா ளர் எஸ்.எக்ஸ்.குலநாயகம் ஆகிய ஒன்பதுபேர் பங்குகொண்ட கூட்டத்தி லேயே மேற்படி தீர்மானம் எடுக்கப் பட்டது. ஆனால் அவ்வாறான தீர்மா னம் எடுக்கப்படவில்லை என்றொ கரு த்து முன் வைக்கப்பட்டு வருகின்றது. அதன் காரணமாகவே இக்கருத்தை பொது வெளியில் கூற முன்பு கட்சியின் பதில் செயலாளர் மற்றும் நிர்வாகச் செயலாளர் ஆகியோருடன் இதனை கூறுவதற்கான ஒப்புதலையும் பெற்றேன் என்பதை தெளிவுபடுத்த விரும்புகின் றேன் என்று அவர் கூறினார்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் அரசியல் கூட்டத்தில் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள மூன்று கட்சிகளுடன் மட்டும் தான் இணை ந்து போட்டியிடுவது என்று முடிவெடு க்கப்பட்டுள்ளதென பாராளுமன்ற உறுப் பினர் எம்.ஏ.சுமந்திரன் கருத்து வெளி யிட்டிருந்தார்.. இது குறித்தே மாவை மாற்றுக் கருத்துக் கூறப் போய் வாங்கிக் கட்டுகின்றார்.

யாழ்.நகரில் இருந்து
ஈழநாட்டிற்காக
- பகிரதன் -

வடமாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் பாவனையால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற போதிலும், அவர்களைப் புனர்வாழ்வுக்கு உட்படுத்துவதற்கான வசதிகள் மிகவும் குறைவாகவே உள்ளது. அதேபோல, பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உளவளத் துணையை வழங்குபவர்களும் ஒரு சிலராகத் தான் இருக்கின்றார்கள். இதற்கான பயிற்சியும், ஆர்வம் உள்ளவர்களின் சேவையும் யாழ்ப்பாணத்தில் அவசரமாகத் தேவையாகள்ளது. 11

இந்தப் பணியில் தன்னை அர்ப்பணித்து செயற்பட்டுக் கொண்டிருப்பவர்களில் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியவர் அருட்தந்தை கலாநிதி டேவிட் வின்சன்ட் பற்றிக். மாற்றம் அறக்கட்டளை என்ற ஒரு அமைப்பை உருவாக்கி போதைவஸ்த்துக்கு எதிரான ஒரு போராட்டத்தை அவர் கடந்த சில வருடங்களாகவே முன்னெடுத்து வருகின்றார் கடுமையான அச்சுறுத்தல்கள்,

தொலைக்காட்சியில் மூழ்கிப் போய் இருப்பா என்பதைத் தெரிந்து கொள்ளும் பிள்ளைள் அந்த நேரத்தில் தமது போக்கில் செல்ல முற்படுகின்றார்கள். இதனை விட தொடர்பு சாதனங்கள் சரியாகப் பயன்படுத்தப்படாமலிருப்பதும் இதற்கான காரணங்களில் ஒன்றாக இருக்கின்றது.

கேள்வி- புனர்வாழ்வு, மருத்துவ சிகிச்சை என்பவற்றால் மட்டும் இந்த போதைப் பொருள் பாவனையைத் தடுத்து விட முடியுமா?

பதில் - நிச்சயமாக முடியாது. இதற்காக ஒருங்கிணைந்த ஒரு செயற்பாடு கட்டாயம் தேவை. புனர்வாழ்வு அல்லது புதுவாழ்வு என்று சொல்லும் போது அங்கு நாம் மனதை ஒருங்குபடுத்துகின்றோம். தியானத்தின் மூலமாக மனதை ஒருங்குபடுத்தி நாம் சிந்திக்க வைக்கின்றோம். அதாவது, அவர்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்துவது முக்கியம்.

இரண்டாவதாக, பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் நல்ல உறவை நாம் தோற்றுவிக்க வேண்டும். பெற்றோர் ஒரு பக்கம் செல்லும் போது பிள்ளைகள் மறுபக்கம் சென்றால்

விரும்பினால் அவர்களை இணைத்துக் கொள்வீர்களா?

பதில்- ஆம். நாம் அதனைத் தான்



விரும்புகின்றோம். தன்னார்வப் பணியாளர்களின் தொகை அதிகரிக்கப்பட வேண்டும். கிராமம், கிராமமாக நாம் தன்னார்வத் தொண்டர்களுக்கு பயிற்சியளித்து அந்தந்தக் கிராமங்களிலேயே

இப்போது விலைவாசியும் பெருமளவுக்கு அதிகரித்திருக்கின்றது. இருந்த போதிலும் சில நல்ல உள்ளங்கள் வழங்கும் உதவிகளின் மூலமாக இந்தப் பிரச்சினைக்கு நாம் தீர்வைக் கண்டு வருகின்றோம். ஆனால், அவை சில சமயங்களில் போதுமானதாக இருப்பதில்லை. இதற்காக நல்ல உள்ளங்கள் தமது பிறந்த தினங்களின் போது அல்லது, வேறு நினைவு தினங்களின் போது எமக்கு ஒரு பங்களிப்பை வழங்கினால் அதுவே எமக்கு பெரியளவு உதவியாக இருக்கும்.

# விமான நிலையத்தில் இருந்து நேரடியாகவே சிகிச்சைக்காக வருபவர்களும் உள்ளார்கள்

பலத்த சவால்களின் மத்தியில் போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களை மீட்டெடுப்பதற்கான இல்லம் ஒன்றை யாழ். நகரில் அவர் நடத்தி வருகின்றார்

போதைப் பொருட்களின் பாவனை அதிகரித்துள்ள நிலையில், பாதிக்கப்பட்டவர்களுடைய புனர்வாழ்வு முக்கியமானது. யாழ்ப்பாணத்தில் இதற்கான வசதிகள் போதியளவுக்கு இல்லை என்ற நிலையில் மாற்றம் அறக்கட்டளையின் சேவை முக்கியமானதாகவுள்ளது.

யாழ். நகரில் நாவலர் வீதியில், ஸ்ரான்லி கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள மாற்றம் அறக்கட்டளையின் அலுவலகத்துக்கு சென்றிருந்தோம். அருட்தந்தை எமது கேள்விகளுக்கு அமைதியாகப் பதிலளித்தார். அவரது நேர்காணலின் முதற்பகுதி இரு வாரங்களுக்கு முன்னர் ஈழநாடுவில் வெளிவந்திருந்தது. இரண்டாவதும் இறுதியுமான பகுதியை இவ் வாரம் தருகின்றோம்.

கேள்வி- போதைப்பொருட்கள் யாழ்ப்பாணத்தில் இந்தளவுக்கு மோசமாகப் பரவியமைக்கு சமூக மாற்றங்கள் எந்தளவுக்கு காரணமாக இருந்துள்ளது?




பதில்- சமூகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், கலாசார சிதைவுகள் போன்றன இவற்றுக்கு காரணமாக இருந்துள்ளன. சினிமா மோகம், குடும்பத்தில் நல்லுறவை வளர்க்காமல் வாழ்வது என்பனவும் இதில் முக்கிய காரணங்களாக உள்ளன.

உதாரணமாக தாய்மார் தொலைக்காட்சி தொடர் நாடகங்களில் மூழ்கியிருப்பதாலும் பிள்ளைகள் பாதிக்கப்படுகின்றார்கள். இவற்றைப் பயன்படுத்தி பிள்ளைகள் தவறாகப் போகின்றார்கள். ஏனென்றால் இந்த நேரத்தில் அம்மா

அந்தக் குடும்பத்தில் நல்ல உறவு இருக்காது. இவ்வாறான நிலையில் பிள்ளைகள் மறுபக்கத்தில் போதைப் பொருட்களை நாடிச்செல்கின்றார்கள். இங்கு ஒருங்கிணைதல் வேண்டும்.

கேள்வி- புனர்வாழ்வுப் பணியை முன்னெடுக்கும் போது நீங்கள் எதிர் கொள்ளும் தடைகள், சவால்கள் என்ன?

பதில்- இனறைய காலகட்டத்தில் பார்க்கும் போது பாதுகாப்புப் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாக உள்ளது. போதை வியாபாரிகள், செல்வந்தர்கள் போன்ற சில தரப்புக்களுக்கு இவ்வாறான

# இது நம்ம யாழ்ப்பாணம் 12

பணிகளை நாங்கள் முன்னெடுப்பதை விரும்பவில்லை. போதைப் பொருள் பாவனையை எங்களுடைய செயற்பாடுகளால் நாம் குறைத்து விடுகின்றோம். அதனால், எமக்கு தொடர்ச்சியாக சிக்கல்கள் வந்து கொண்டு தான் இருக்கின்றது. அதாவது எமக்கு பாதுகாப்பு குறைவு. பாதுகாப்பற்ற ஒரு சூழலில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

சிகிச்சைக்கு வரும் இளைஞர்கள் கோபமடைவது போன்றன அதிகமாக வுள்ளது. இவ்வாறான நிலையில் நாம் நிதானமாகச் செயறபட வேண்டியிருக்கின்றது. இது போன்ற பல தடைகளை நாம் சந்தித்துக் கொண்டிருக்கின்றோம்.

கேள்வி- உங்களுடைய இந்தப் பணியில் தன்னார்வத் தொண்டர்களாக பலர் செயற்படுகின்றார்கள். அவ்வாறு இணைந்து செயற்படுவதற்கு யாயபராவது

அவர்கள் பணிபு ரிவதற்கு ஊக்குவித்து வருகின்றோம். கிராமங்களில் பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்கள், மாணவர்களுக்கு நாம் பயிற்சியளிக்கின்றோம். ஆகவே, தன்னார்வப் பணியாளர்கள் அனைத்து மட்டங்களிலும் எமக்குத் தேவை. தன்னார்வத் தொண்டர்களாக பலரும் எம்முடன் இணைந்து செயற்படுகின்றார்கள்.

கேள்வி- புனர்வாழ்வுச் செயற்பாடுகளுக்கு இப்போது உங்களுக்குள்ள இடம் போதுமானதாக இருக்கின்றதா?

பதில் - மருதன்கேணி பகுதியில் ஒரு இடத்தை எடுத்து இதற்காக நாம் தயார்படுத்திவருகின்றோம். இது சுமார் 10 ஏக்கர் நிலம். அதன் மூலமாக இந்த இடப் பிரச்சினை தீர்க்கப்படலாம். அதற்கு சில தொண்டு நிறுவனங்களும் உதவ முன் வந்திருக்கின்றன. இங்கு பயிற்சி நிலையம், சிகிச்சை நிலையம் என்பனவற்றை உருவாக்கி பலருக்கு பயிற்சியளிப்பதற்கு திட்டமிடுகின்றோம். இவற்றை முன்னெடுப்பதற்கு போதிய நிதி இல்லாதிருப்பது ஒரு பிரச்சினையாகவிருக்கின்றது. தேவையான நிதி உதவி கிடைத்தால் இந்த மருதன் கேணி புனர்வாழ்வு நிலையத்தை விரைவாக எம்மால் ஆரம்பிக்கக் கூடியதாக இருக்கும். இது வெறுமனே பேச்சாக இருக்கக்கூடாது. இதனை ஒரு விஞ்ஞான ரீதியாக அமைப்பதற்குத் தான் நாம் திட்டமிடுகின்றோம்.

கேள்வி- வேறு எவ்வாறான தேவைகள் பிரச்சினைகள் உங்களுக்கு உள்ளது?

பதில்- எம்மிடம் சிகிச்சைக்காக வருபவர்களுக்கு உணவுகளை வழங்குவதில் கூட எமக்குப் பிரச்சினைகள் உள்ளன.

கேள்வி- சிகிச்சைக்காக வருபவர்களுக்கு தொழிற் பயிற்சிகளைக் கொடுத்து, சிகிச்சை முடிந்த பின்னர் அவர்களாகவே வேலை ஒன்றை தேடிக்கொள்ளக் கூடிய நிலைமையை ஏற்படுத்துகின்றீர்களா?

பதில்- நிச்சயமாக. அந்தப் பின்னணியில் தான் மருதன்கேணியில் பத்து ஏக்கர் காணியை பயன்படுத்த திட்டமிடுகின்றோம். இளைஞர்களை சிகிச்சையின் பின்னர் வெளியே விட்டால் மீண்டும் அவர்கள் போதைப் பொருட்களை நாடிச் செல்வதற்கான ஆபத்து உள்ளது. அதனால், அவர்கள் புதிய வாழ்க்கை ஒன்றை உருவாக்கிக் கொள்ளும் வகையில் இவ்வாறான தொழிற்பயிற்சிகளை வழங்குவதற்குத் திட்டமிடுகின்றோம். முன்னர் செய்த தொழிலை விட்டுவிட்டு மற்றொரு தொழிலைச் செய்யக்கூடியவராக அவரை மாற்றுவதற்கான திட்டங்களும் எம்மிடம் உள்ளது. இவ்வாறு வழமையான தொழிலை சூழ்நிலையை மாற்றுவதன் மூலமாக இந்தப் போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்தலாம் என நினைக்கிறோம்.

சில பெற்றோர் பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி விட்டால் அவர்கள் திருந்தி விடுவார்கள் என நினைக்கின்றார்கள். அதற்காக கடன்பட்டு, காணி, நகைகளை விற்று பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்புகின்றார்கள். ஆனால், அவர்கள் அங்கு சென்ற பின்னரும் போதைப் பொருட்களைப் பாவிக்கின்றார்கள். இவ்வாறான சிலர் நாட்டுக்கு அனுப்பப்படுகின்றார்கள் விமான நிலையத்திலிருந்து எமது நிலையத்துக்கு நேரடியாக அழைத்து வரப்பட்டவர்களும் இருக்கின்றார்கள். அதனால், உள்நாட்டிலேயே புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பித்து வேலை வாய்ப்புக்களை வழங்க வேண்டும் என்றார்.

உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையின்
30வது ஆண்டு விழா:-
23 ஏப்ரல் 2023
“சங்கீத சங்கமம் 2023”

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

# உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும்.

ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

31 டிசம்பர் 2022 முதல் 06 ஜனவரி 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

## மேலதிக விபரங்களுக்கு:-

## ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பரஞ்சோதி சிவானந்தன்

கட்டுவன் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பரஞ்சோதி சிவானந்தன் அவர்களின் மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 01 ஜனவரி 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பரஞ்சோதி சிவானந்தன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தயாநிதி சுந்தரேஸ்வரன்

அனலைதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தயாநிதி சுந்தரேஸ்வரன் அவர்களது முதலாவது ஆண்டு: நினைவு நாள் 31 டிசம்பர் 2022 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தயாநிதி சுந்தரேஸ்வரன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி வசந்தா தவரத்தினம்

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் பிரம்டன் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி வசந்தா தவரத்தினம் அவர்களது இரண்டாவது ஆண்டு நாள் நினைவு நாள் 02 ஜனவரி 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி வசந்தா தவரத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பார்வதி சதாசிவம்

கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் பிரம்டன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பார்வதி சதாசிவம் அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாள் 04 ஜனவரி 2023 புதன்கிழமையாகும்.. அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பார்வதி சதாசிவம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கம்மா சதாசிவம்

புங்குடுதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கம்மா சதாசிவம் அவர்களது நான்காவது ஆண்டு நாள் நினைவு நாள் 02 ஜனவரி 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தங்கம்மா சதாசிவம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 30வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சுப்பர் பொன்னுத்துரை

### திருமதி நாகமுத்து பொன்னுத்துரை

நயினாதீவு 3ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பர் பொன்னுத்துரை திருமதி நாகமுத்து பொன்னுத்துரை இணையர்களது 30வது ஆண்டு நினைவு நாள் 01 ஜனவரி 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சுப்பர் பொன்னுத்துரை திருமதி நாகமுத்து பொன்னுத்துரை ஆகியோரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



31 டிசம்பர் 2022 சனிக்கிழமை அனலைதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தயாநிதி சுந்தரேஸ்வரன் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



01 ஜனவரி 2023 ஞாயிற்றுக்கிழமை நயினாதீவு 4ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பர் பொன்னுத்துரை திருமதி நாகமுத்து பொன்னுத்துரை இணையர்களது 30வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



01 ஜனவரி 2023 ஞாயிற்றுக்கிழமை கட்டுவன் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரஞ்சோதி சிவானந்தன் அவர்களது 3வதுஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



01 ஜனவரி 2023 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சர்வானந்தன் பவளராணி தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஹரிசனின் 23வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் ஹரிசன் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



01 ஜனவரி 2023 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி சிந்தியா சிவபாலன் திரு திருமதி சிவபாலன் லலிதகுமாரி குடும்பத்தினர் புத்தாண்டு அன்பளிப்பாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



01 ஜனவரி 2023 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு சிங்கநாயகம் குடும்பத்தினர் புத்தாண்டு தினத்தன்று அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



01 ஜனவரி 2023 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி றொபின் கிரிஜா இணையர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு புத்தாண்டு தினத்தன்று சிறப்பு உணவும் இனிப்பு வகைகளும் வழங்கி மகிழ்ந்தார்கள்




01 ஜனவரி 2023 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி றொபின் கிரிஜா இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு புத்தாண்டு தினத்தன்று சிறப்பு உணவும் இனிப்பு வகைகளும் வழங்கி மகிழ்ந்தார்கள்



01 ஜனவரி 2023 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி றொபின் கிரிஜா இணையர்கள் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்கு புத்தாண்டு தினத்தன்று சிறப்பு உணவும் இனிப்பு வகைகளும் வழங்கி மகிழ்ந்தார்கள்



02 ஜனவரி 2023 திங்கட்கிழமை சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் பிரம்டன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி வசந்தா தவரத்தினம் அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



02 ஜனவரி 2023 திங்கட்கிழமை புங்குடுதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சதாசிவம் தங்கம்மா அவர்களது 4வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

## 34வது பிறந்தநாள் வாழ்த்து



## செல்வன் முகுந்தன் நந்தகுமார்

கனடாவில் வசிக்கும் திரு,திருமதி நந்தகுமார் ஞானகுமாரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் முகுந்தன் நந்தகுமார் 28 டிசம்பர் 2022 புதன்கிழமை தனது 34வது பிறந்த நன்நாள் ஆகும். அன்றையதினம் செல்வன் முகுந்தன் தனது பெற்றோருடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார். அகவை 43 காணும் செல்வன் முகுந்தன் பல்கலையும் கற்றுப் பார் போற்றும் பைந்தமிழ் மகனாக வாழ அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!




04 ஜனவரி 2023 புதன்கிழமை கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் பிரம்டன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பார்வதி சதாசிவம் அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



05 ஜனவரி 2023 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி மாதங்கி செல்வராஜா அவர்களது 23வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி மாதங்கி தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் இனிப்பு வகைகளும் வழங்கி மகிழ்ந்தார்


TITLE SPONSOR
MAHESAN SUBRAMANIAM
REAL ESTATE BROKER
eXp REALTY BROKERAGE
ஆனலை எக்ஸ்பிறஸ் HD
Analai Express
POWERED BY
ASIYANS
Quality Forever
பாரம்பரியம்
முத்தமிழோடு கலைஞர்களின் சங்கமம்
Chinese Cultural Centre 5183 Sheppard Ave E,
Scarborough, ON M1B 5Z5
SATURDAY
JAN 07 2023 @ 4.PM
GOLD SPONSOR
MORTGAGE ALLIANCE
ARI PARAMALINGAM
Mortgage Agent
SILVER SPONSOR
BRONZE SPONSOR
VASANTHA JEWELLERY
VIBRANT HOSPITALITY GROUP
Y&A
TORBRAM
HOMELIFE
PRINT MEDIA PARTNER
ஈழநாடு
STREAMING PARTNER
IBC தமிழ்
RADIO SPONSOR
OTHER SUPPORTING SPONSOR
GTA தமிழ்
Tamil Mirror







# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 MIDDLEFIELD ROAD, SCARBOROUGH, ON, M1V 5B8 TEL: 416-321-6104 | www.ayyappan.ca

## மண்டல மகர விரத விஞ்ஞாபனமும் ஐயப்பன் மாலை அணியும் வைபவமும்

### காலம் 16-11-2022 புதன்கிழமை முதல் 21-01-2023 சனிக்கிழமை வரை

ஐயப்பன் மெய்யடியார்களே!

கலியுகத்தில் தர்மம் குன்றி அதர்மம் மேலிட்டு துன்ப சாகரத்தில் உழலும் வேளையில் தன்னை நாடி வந்த பக்தர்களை கைவிடாத தெய்வம், பட்ட பந்தம் அணிந்து சின்முத்திரைகாட்டி நிராயுதபாணியாய் காட்சி தந்து நெஞ்சுருகி, நெஞ்சுருக வைத்து எம்மை அயராது ரட்சிக்கும் பகவான் ஐயப்பன். ஸ்காபரோ - 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் மண்டல மகர விரத மாலை அணியும் வைபவம் 16.11.2022 புதன்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை புனித துளசிமாலை அணியும் வைபவம் இடம் பெறும். மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் கட்டாயம் பதிவு செய்து கொள்ளவும்.

### தினமும் இரவு 9.15மணிக்கு ஹரிவராஸன பூசை இடம் பெறும்.

**வனதேவதை, பூஜை** - 15-11-2022 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணி

**விசேட ஹோமம் - மாலை அணிதல்** - 16-11-2022 புதன்கிழமை -அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். துளசி மாலை அணியும் வைபவம் அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை இடம் பெறும்

**சுவாமிமார்களின் விளக்குப்பூசை**
25-11-2022 வெள்ளிக்கிழமை, 26.11.2022 சனிக்கிழமை ஆகிய இருதினங்களும் மாலை 5.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை இடம் பெறும்.

**ஆஞ்சநேய யாகம்** - 27-11-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 முதல் 11.00 மணி வரை நடைபெறும்.

**சுவாமிமார்களின் இலட்சார்ச்சனை**
02.12.2022 வெள்ளிக்கிழமை, 03.12.2022 சனிக்கிழமை ஆகிய இரு தினங்களும் காலை 10.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரையும் இடம் பெறும்.

**1008 கலச சங்காபிசேகம்** - 11-12-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு இடம் பெறும்.

**பால்குட அபிஷேகம்** 18-12-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் 11.00 மணிவரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணிவரையும் இடம் பெறும்.

**புலிப்பால் வேட்டை** - 18-12-2022 ஞாயிற்றுக்கிழமை மதியம்

**நாகராஜ உற்சவம் - சர்ப்ப சாந்தி** - 18-12-2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும் இடம் பெறும்.

**ஆஞ்சநேயர் ஜெயந்தி**
23.12.2022 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை யாகம், அபிஷேகம், பூஜை நடைபெறும்.

**நெய் நிரப்புதல், இருமுடி கட்டுதல், படி ஏறி அபிஷேகம் செய்தல்ச பேட்டை துள்ளுதல்**
25-12-2022 ஞாயிற்றுக்கிழமை, 26.12.2022 திங்கட்கிழமை ஆகிய தினங்களில் அதிகாலை 4:00 மணி முதல் மாலை 3:00 மணி வரையும் இடம் பெறும். தொடர்ந்து 27.12.2022 செவ்வாய்க்கிழமை தொடக்கம் 31.12.2022 சனிக்கிழமை வரை காலை 8:00 மணி முதல் காலை 11:00 மணி வரையும் இடம் பெறும்.

**மஞ்சமாதா திருவிழா, புஸ்பாபிசேகம்**
01-01-2023 ஞாயிற்றுக்கிழமை முதல் 14-01-2023 சனிக்கிழமை வரை.

**மகர சங்கிராந்தி, திருவாபரணம், மகரஜோதி தரிசனம், பூச்சொரிதல், தைப்பொங்கல்**
14-01-2023 சனிக்கிழமை

**வைரவர் மடை, வனபூஜை, குருதிபூஜை, வேண்டுதல் நிறைவேற்று உற்சவம்**
21-01-2023 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு இடம் பெறும்.



அடியார்கள் புனிதமான ஐயப்பன் மகரமண்டல பூசைக்காலத்தில் பக்தி சிரத்தையுடன் காலை, மாலை நடைபெறும் ஐயப்பூசை விழாக்களில் கலந்து கொள்வதுடன் முடிந்தவரை மண்டலபூசை உபயங்களை பொறுப்பேற்று சிறப்பித்து ஐயப்ப பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

### பக்தர்களுக்கு முக்கிய அறிவித்தல்கள்

1. மாலை அணிதல் 16.11.2022 புதன்கிழமை அதிகாலை 5:00 மணிக்கு ஆரம்பமாகும்.
2. கைத்தொலைபேசியை ஆலயத்தினுள் பாவிக்க வேண்டாம்.
3. ஆலயத்தினுள் புகைப்படம், வீடியோ எடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது என்பதனையும் அனைவருக்கும் பணிவுடன் அறியத்தருகின்றோம்.

- இறை சேவையிலுள்ள ஆலய அறங்காவலர் சபை

# தென்மராட்சி நிறுவனம் கனடாவின் புதுவருட ஒன்றுகூடல்

தென்மராட்சி நிறுவனம் கனடாவின் புதுவருட ஒன்று கூடல் கடந்த 02 ஜனவரி 2023 திங்கட் கிழமை 795 மார்க்கம் றோட்டில் அமைந்துள்ள **Godavari** உணவகத்தில் மாலை 6.00 மணிக்கு நடைபெற்றது. மேற்படி மன்றத்தின் தலைவர் திரு சண்முகலிங்கம் தேவதாஸ் அவர்களின் தலைமையில் திரு சத்தியசீலன் (சிலுன்) அவர்கள் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். அவுஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்திருந்த திரு ந.கருணாகரன் அவர்கள் சிறப்புரையாற்றினார். அதனைத் தொடர்ந்து தென்மராட்சி மண்ணுக்கு சேவையாற்றிய திரு துரைராஜா அவர்கள், திரு திவ்வியராஜன் அவர்கள் திரு தமிழன் வழிகாட்டி செந்தி ஆகியோர் கௌரவிக்கப்பட்டதையடுத்து தலைவர் திரு சண்முகலிங்கம் தேவதாஸ் அவர்கள் உரையாற்றுகையில் தென்மராட்சி மன்றம் இதுவரை செய்த சேவைகளை எடுத்துரைத்தார்.

கடந்த ஆண்டு வறுமைக்கோட்டுக்குள் கீழ் உள்ள 63 மாணவர்களுக்கு கல்விக்காக செய்த பண உதவி காரணமாக 42 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியுள்ளார்கள் என்ற பெருமைக்குரிய செய்தியைப் பகிந்து கொண்ட போது அவையோர் பலத்த கையொலி எழுப்பி மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர். அத்துடன் தனது தனிப்பட்ட செலவில் சோழ நிலா என்ற கிராமத்தை தத்தெடுத்து அவர்களது கல்வி வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு செயற்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார். அதனைத் தொடர்ந்து தென்மராட்சி பாடசாலைகளுக்கு உதவிகள் தேவைப்படுவதாக தெரிவித்த போது இலங்கை முன்னாள் வர்த்தக சங்கத்தின் கனடா தலைவர் திரு கேதா நடராஜா, திரு கிருஷ்ண கோபால், திரு அருண்குலசிங்கம் திரு ஜெயம், திரு சோமசச்சி திரு கல்யாணசுந்தரம் திரு சோதி திரு கருணா உட்பட வீடு விற்பனை முகவர் திரு ராஜ் நடராஜா ஈழநாடு பத்திரிகை ஆசிரியர் திரு கு.பரமேஸ்வரன் உடனடியாக 1000.00 டொலர்களை வழங்கிப் பங்களிப்பினைச் செய்தார்கள்.

மிகவும் சுவையான **Godavari** உணவகத்தின் இரவு விருந்துபசாரத்துடன் விழா இனிதே நிறைவேறியது.














# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# 2023:- பேச்சுவார்த்தைகளின் ஆண்டா? பேய்க்காட்டப்படும் ஆண்டா?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



புதிய ஆண்டு பேச்சு வார்த்தைகளோடு தொடங்குகின்றது. புத்தாண்டு பிறந்த கையோடு மூன்று அல்லது நாலு நாட்களுக்கு தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகள் இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக மூன்று நாட்கள் என்பதே வெளியுலகத்தை கவர்வதற்கான ஒரு ஏற்பாடு தான்.

அரசாங்கம் பேச்சு வார்த்தைகளில் சீரியஸ் ஆக இருக்கிறது என்பதை காட்டுவதற்கான ஓர் உத்தி அது. அவ்வாறு காட்ட வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு உண்டு. ஏனெனில் இப்பொழுது நடக்கும் பேச்சுவார்த்தைகள் தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வைத் தர வேண்டும் என்பதை விடவும், பொருளாதார நெருக்கடியில் இருந்து அரசாங்கத்தைப் பிணை எடுக்கக் கூடிய நாடுகளை கவர்வதற்கான ஒரு ஏற்பாடு தான்.

மோதலில் ஈடுபடும் தரப்புகள் அல்லது பிணக்கிற்கு உட்பட்ட தரப்புகள் எப்பொழுது பேச்சுவார்த்தைக்கு வரும் என்றால்,அரசியல் வலுச் சமநிலை மாறும் போது தான்.அரசியல் வலுச் சமநிலையை போரின் மூலமும் மாற்றலாம். மக்கள் போராட்டங்களின் மூலமும் மாற்றலாம். தேர்தல் முடிவுகளின் மூலமும் மாற்றலாம்.

இலங்கைத்தீவின் வலுச் சமநிலை பொருளாதார நெருக்கடியின் விளைவாக தோன்றிய தன்னெழுச்சி போராட்டத்தின் மூலம் மாற்றப்பட்டு விட்டது. தன்னெழுச்சி போராட்டங்கள் சிங்கள பௌத்த கடுந்தேசிய வாதத்தை பதுங்க செய்து விட்டன. சிங்கள பௌத்த கடுந் தேசியவாதமானது சிங்கள பௌத்த லிபரல் முகமூடியின் பின் மறைவெடுத்து நிற்கிறது. தாமரை மொட்டுக் கட்சி ஒற்றை யானைக்கு பின் பதுங்கி நிற்கின்றது. இதனால் ஏற்பட்ட வலுச்சமநிலை மாற்றம் தான் ரணில் விக்கிரமசிங்கவின் பேச்சுவார்த்தைக்கான அழைப்புக்குக் காரணம்.

இதைத் தமிழ்த் தரப்பின் நோக்கு நிலையில் இருந்து சொன்னால், பேச்சுவார்த்தைக்கான அரசியல் வலுச் சமநிலை இலங்கைத்தீவில் உருவாக காரணம் தமிழ்த்தரப்பின் போராட்டங்கள் அல்ல. தமிழ்த்தரப்பு பலமடைந்ததாலும் அல்ல.மாறாக சிங்களத்தரப்பு தனக்குள்தானே மோதி பலவீனம் அடைந்ததே காரணம். இவ்வாறு சிங்களத் தரப்பு பலவீனமடைந்ததால் இலங்கைத்தீவின் அரசியல் வலுச்சமநிலை மாற்றம் கண்டுள்ளது. இதை பயன்படுத்தி வெளிநாடுகள் இலங்கைத் தீவின் மீதான தமது பிடியை மேலும் இறுக்க முற்படும்பொழுது இத்தீவின் அரசியல்,இராணுவ, பொருளாதார வலுச் சமநிலையில் மேலும் மாற்றம் வரலாம்.

உதய கம்மன்பில அதைத்தான் பொருளாதார நெருக்கடியை பகடைக்காயாக கொண்டு நாட்டுக்கு எதிரான தீர்மானங்களை செயற்படுத்துவதாயின், 30 வருடகால யுத்தத்தை வெற்றி கொள்ளாமல் இருந்திருக்கலாம் என்று கூறியிருக்கிறார்.

கஜேந்திரக்குமார் அதைத் தான் தமிழ் நோக்குநிலையில் இருந்து கூறியிருக்கிறார். அதாவது பொருளாதார நெருக்கடி காரணமாக சிங்களத்தரப்பு பலவீனம் அடைந்து விட்டது, அதனால் பேச்சுவார்த்தைக்கு இறங்கி வருகிறது, எனவே தமிழ்த் தரப்பு தனது பேரத்தை பலப்படுத்த வேண்டும் என்று. ஆனால் இது தமிழ்த்தரப்பின் போராட்டத்தாலோ அல்லது அதிகரித்த பலத்தாலோ ஏற்பட்ட வலுச்சமநிலை மாற்றம் அல்ல.இந்த வலுச் சமநிலை மாற்றத்தில் அரசாங்கத்துக்கு உதவி புரியும் நாடுகளின் அழுத்தமும் ஓரளவுக்கு உண்டு. பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான உதவிகளும் இனப்பிரச்சனைக்கான தீர்வும் ஒரே பொதிக்குள் வைக்கப்பட வேண்டும் என்று மேற்கு நாடுகள் வலியுறுத்துகின்றன.

அதே சமயம் நடந்து முடிந்த ஜெனிவா கூட்டத்தொடரில் இந்தியாவின் நிலைப்பாடும் அதுவாக இருந்தது. எனவே பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு இனப்பிரச்சினைக்கான தீர்வை கண்டு பிடிக்க வேண்டும் என்ற அழுத்தம் அரசாங்கத்தின் மீது உண்டு. அதுவும் அரசாங்கம் பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன என்று ஒரு தோற்றத்தை கட்டியெழுப்பக் காரணம். எனவே இதில் தமிழ்த் தரப்பின் பேர பலம் என்பது முதலாவதாக சிங்களத்தரப்பின் வீழ்ச்சியாகவும், இரண்டாவதாக வெளி உலகத்தின் அழுத்தமாகவும் காணப்படுகிறது.



அதனால் பேச்சுவார்த்தையை எதிர்பார்ப்போடு பார்க்கும் வெளியுலகத்திற்கு தமிழ்த்தரப்பு அதில் ஈடுபடும்–என்கேஜ்–engage–பண்ணும் என்ற செய்தி கொடுக்கப்பட வேண்டும். இதன் பொருள் மேற்கு நாடுகள் ஒரு தீர்வை பெற்று தரும் என்பதல்ல. மாறாக, நவீன இராஜதந்திரவியல் எனப்படுவது என்கேஜ்மென்ட் தான். இந்த அடிப்படையில், ஒரு தரப்பாக சிந்தித்தால், ஒரு தேசமாக சிந்தித்தால், பேச்சுவார்த்தையில் என்கேஜ் பண்ண வேண்டும். தவிர தமிழ்த் தரப்பிடம் நாட்டில் சொந்தமாகப் பலம் எதுவும் கிடையாது.

அந்த பலத்தின் காரணமாக வலுச் சமநிலை மாறவும் இல்லை. எனவே தன் பலம் எதுவென்று கண்டு தமிழ்த்தரப்பு பேச்சில் ஈடுபட வேண்டும். அதன் பொருள் பேச்சுவார்த்தையை இதயபூர்வமாக நம்ப வேண்டும் என்பதல்ல. இதுவிடயத்தில் "என்கேஜ் அண்ட் எக்ஸ்போஸ்'' அதாவது ஈடுபட்டு அதை அம்பலப்படுத்துவது என்ற ஒரு தந்திரத்தை தமிழ்த்தரப்பு கடைப்பிடிக்க வேண்டும்.

சிங்களபௌத்த பெருந்தேசியவாதத்தின் கடும்போக்குவாதிகள் லிபரல் முகமூடி அணிந்த ஒற்றை யானைக்கு பின் பதுங்குகிறார்கள்.அவர்களுக்கு உலக அங்கீகாரத்தை பெறுவதற்கு அந்த ஒற்றை யானைய ஏற்பாடு செய்யும் பேச்சுவார்த்தை என்ற தோற்றமாயை தேவை.எனவே அதைப் பயன்படுத்தி பதுங்கியிருக்கும் சிங்கள பௌத்த பெருந் தேசியவாதத்தின் கடும்போக்காளர்களை ஒரு தீர்வை நோக்கி வளைத்தெடுக்கலாம் என்று மேற்கு நாடுகள் நம்பக்கூடும்.

அந்த நம்பிக்கை தமிழ் மக்களின் சுமார் ஒரு நூற்றாண்டு கால அனுபவத்துக்கு பொருந்தி வரவில்லை என்பதனை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு தமிழ்த்தரப்புக்கு உண்டு.

எனவே பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு எதிர்த் தரப்பை அம்பலப்படுத்த வேண்டும். அது தான் இப்பொழுது உயர்ந்திருக்கும் தமிழ் தரப்பின் பேரத்தை தொடர்ந்து உயர்வாக வைத்திருக்க உதவும்

பன்னாட்டு நாணய நிதியத்தின் உதவிகள் எதிர்பார்த்த வேகத்தில் கிடைக்கவில்லை. மலும் அந்த உதவிகள் கடனை அடைக்க போதுமானவை அல்ல.ஆனால் அந்த உதவிகள் கிடைத்தால் ஏனைய நாடுகளிடம் உதவி பெறத் தேவையான அங்கீகாரம் அரசாங்கத்திற்கு கிடைக்கக் கூடும். எனவே அந்த அங்கீகாரத்தை நோக்கி உழைக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு உண்டு. இந்த அடிப்படையில் பார்த்தால் அரசாங்கம் மேற்கு நாடுகளை சமாளிக்க வேண்டிய நிலையில் உள்ளது. அதனால் ரணில் விக்கிரமசிங்க முன்பு 2015இல் இருந்து 2018 வரையிலும் முன்னெடுத்த நிலைமாறுகால நீதிப் பொறிமுறையை ஒரு புதிய வடிவத்தில் முன்னெடுக்க முயற்சிப்பதாக தெரிகிறது. தென்னாபிரிக்கப் பாணியிலான நல்லிணக்கப் பொறிமுறை என்ற உரையாடல் அதைத் தான் குறிக்கிறது. ஆனால் நிலைமாறுகால நீதி என்பது இலங்கைத்தீவைப் பொறுத்த வரையிலும் ஓர் அழகிய பொய்யாகி விட்டது. ரணிலோடு நிலைமாறுகால நீதியின் பங்காளியாகச் செய்யப்பட்ட கூட்டமைப்பின் பேச்சாளர் 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வவுனியாவில் வைத்துச் சொன்னார்....

ஆறு ஆண்டுகளாக ஒரு பரிசோதனையை முயற்சி செய்தோம். அதில் தோற்று விட்டோம்.'' என்று. அவ்வாறு ஏற்கனவே இந்த நாடு பரிசோதித்து தோல்வி கண்ட ஒரு விடயத்தை மீண்டும் ரணில் விக்கிரமசிங்க கையில் எடுக்கப் போகிறாரா?

முன்னைய நிலை மாறுகால நீதிச் செய்முறைகளின் போது கூட்டமைப்பு அரசாங்கத்தோடு இணைந்து யாப்புருவாக்க முயற்சிகளில் ஈடுபட்டது. ஒரு புதிய யாப்புக்கான இடைக்கால வரைபு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அமர்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா கூறிய வார்த்தைகளை இங்கே தமிழ்த்தரப்பு மீட்டுப் பார்க்க வேண்டும்.

சம்பந்தரின் காலத்திலேயே ஒரு தீர்வைக் காண வேண்டும். அவரைப் போல விட்டுக் கொடுக்கும் ஒரு தமிழ்த் தலைவர் இனி வர மாட்டார் என்று டிலான் தெரிவித்திருந்தார். அது உண்மை. ஏனென்றால் அந்தளவுக்கு சம்பந்தர் விட்டுக் கொடுத்தார். பிளவுபடாத பிரிக்கப்பட முடியாத நாட்டுக்குள் தீர்வு என்று சம்பந்தர் காயத்திரி மந்திரம் போல திரும்பத் திரும்பச் சொன்னார்.ஆனால் அது எதுவுமே மகிந்த அணியை சமாதானப்படுத்தவில்லை. அவர்கள் யாப்புருவாக்க முயற்சியை இடைக்கால வரைபோடு குழப்பினார்கள்.

இப்பொழுது மறுபடியும் சம்பந்தர் விட்டுக் கொடுக்கப் போகிறாரா இல்லையா என்பதனை தமிழ்மக்கள் உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். டிலான் வழங்கிய பாராட்டு பத்திரத்தை விடவும் தமிழ் மக்கள் கடந்த பொதுத் தேர்தலில் சம்பந்தருக்கு வழங்கிய தண்டனை பெரியது.

எனவே கூட்டமைப்பு இம்முறை ஏனைய கட்சிகளோடு இணைந்து திட்டவட்டமாக சில முடிவுகளை எடுக்க வேண்டும். முதலாவதாக பேச்சுவார்த்தைக்கான கட்டமைப்பை மறுகட்டமைப்பை செய்ய வேண்டும் இப்பொழுது நடந்து கொண்டிருப்பது சர்வகட்சி மாநாடு. அது வெளித்தோற்றத்திற்கு எல்லாக் கட்சிகளின் கருத்துக்களையும் கேட்கும் ஒரு ஜனநாயக ஏற்பாடாக தோன்றலாம்.

ஆனால் கடந்த 75 ஆண்டுகால அனுபவம் என்னவென்றால், இனப்பிரச்சினைக்கான தீர்வு பொறுத்து எல்லா சர்வ கட்சி மாநாடுகளும் ஏமாற்று வித்தைகளே.எனவே பேச்சுவார்த்தைகளை பிணக்குக்கு உட்பட்ட தரப்புகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தைகளாக மாற்ற வேண்டும். அதன்படி தமிழ்த்தரப்பு சிங்களத் தரப்புடனும் முஸ்லிம் தரப்புடனும் பேச வேண்டும்.

அரசாங்கமே சிங்களத் தரப்பை பிரதிநிதித்துவப் படுத்த வேண்டும். எல்லா கட்சிகளையும் கூட்டிக் கொண்டு வந்து சர்வகட்சி மாநாடு என்று சொல்லி குழப்பியடிக்க முடியாது. சிங்களக் கட்சிகளை சமாளிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்குரியது. அரசாங்கத்தோடு நிற்கும் தமிழ்க் கட்சிகளையும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அரசு தரப்பாகவே பார்க்க வேண்டும். இவ்வாறு பேச்சுவார்த்தைகளை மறு கட்டமைப்பு செய்ய வேண்டும்.

அடுத்த கட்டமாக மூன்றாவது தரப்பை உள்ளே கொண்டு வர வேண்டும். இந்தியாவும் உட்பட மேற்கு நாடுகளை இணைத்தலைமை நாடுகளாக உள்ளே இறக்க வேண்டும். அண்மையில் முன்னாள் சமாதான தூதுவரான எரிக் சொல் ஹெய்ம் கூறியிருக்கிறார்....மூன்றாவது தரப்பு தேவையில்லை என்று.அது அவருடைய தனிப்பட்ட அபிப்பிராயம். அதுவே தமிழ்தரப்பின் அபிப்பிராயமாக இருக்கத் தேவையில்லை.

இவ்வாறு பேச்சுவார்த்தைகளை மறுக்கட்டமைப்பு செய்து விட்டு பேசத் தொடங்கலாம். ரணில் விக்கிரமசிங்க தயாரிக்கும் நாடகத்தில் பங்காளிகளாக இணைவதா அல்லது தமது மக்களுக்கு விசுவாசமாக இருப்பதா என்பதை தமிழ் கட்சிகள் தீர்மானிக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது.

போன தடவை நிலைமாறுகால நீதியின் பங்காளிகளாக மாறப் போய் ஆறு ஆசனங்களை இழந்த கூட்டமைப்பு இனிமேலும்"பிளவுபடாத பிரிக்கப்பட முடியாத இலங்கைத் தீவுக்குள்'' என்று உச்சாடனம் செய்யத் தேவையில்லை.

டிலான் பெரேராக்களின் பாராட்டுப் பத்திரமா? அல்லது அல்லது தமது சொந்த மக்களின் தோல்வியா? என்பதனை தீர்மானிக்க வேண்டிய ஆண்டு இது.

# அ.தி.மு.க - பா.ம.க மோதல் ஏன்? கூட்டணி தொடருமா?



பாட்டாளி மக்கள் கட்சியின் பொதுக் குழுவில் அக்கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் அதிமுக குறித்துப் பேசியதற்கு அதிமுகவின் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் பதிலளிக்க, விவகாரம் இரு கட்சிகளுக்கு இடையிலான மோதலாக உருவெடுத்திருக்கிறது. நாடாளுமன்ற தேர்தல் கூட்டணி கணக்குகளில் இது பாதிப்பை ஏற்படுத்துமா?

புத்தாண்டு தினத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் பொதுக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பேசிய அக்கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ், `அதிமுக நான்காக உடைந்திருக்கிறது. தி.மு.க மீது மக்களுக்கு கடுமையான விமர்சனங்கள் இருக்கின்றன. அடுத்து நாம் தான் இருக்கோம். மற்றவர்கள் எல்லாம் வெறும் சத்தம் தான்' என்று பேசினார்.

அவருடைய இந்தப் பேச்சுத்தான் அதிமுகவை கொந்தளிக்க வைத்துள்ளது. இந்த விவகாரம் குறித்து திங்கட்கிழமையன்று செய்தியாளர்களிடம் பேசிய அதிமுகவின் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், `ஏறி வந்த ஏணியை மறக்கலாமா? ஜெயலலிதா இல்லையென்றால் பாமகவே வெளியில் தெரிந்திருக்காது, என்று கூறியுள்ளார்.

மேலும், `ஜெயலலிதா கூட்டணி வைத்ததால் தான் பா.ம.கவுக்கு அங்கீகாரமே கிடைத்தது. அதற்கு முன்பு அந்தக் கட்சிக்கு அங்கீகாரமே கிடையாது. 1991ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் பாமகவுக்கு ஒரு இடம் தான் கிடைத்தது. அதற்குப் பிறகு நடந்த நாடாளுமன்ற தேர்தலில் ஒரு இடம் கூட கிடைக்கவில்லை.

1998ல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அதிமுக - பாமகவுக்கு 5 இடங்களை வழங்கியது. அதில் 4ல் வெற்றிபெற்றார்கள். அப்போது தான் தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரம் பாமகவுக்குக் கிடைத்தது. இப்படி நன்றி மறந்து பேசினால், தமிழக மக்கள், அதிமுகவினர் மட்டுமல்ல, அவர்களுடைய கட்சிக்காரர்களே மதிக்க மாட்டார்கள்.

2001 சட்டமன்றத் தேர்தலில் பா.ம.கவுக்கு 27 இடங்களை ஜெயலலிதா வழங்கினார். அதில் 20 இடங்களில் வெற்றி பெற்றனர். இப்படி அதிமுக தயவால் தான் சட்டமன்றத்தில் நுழைந்தது. நாடாளுமன்றத்தில் நுழைந்தது. மத்திய மந்திரி பதவிகளைப் பெற்றது. அதிமுகவின் தயவையெல்லாம் பெற்றுவிட்டு, இப்போது அதிமுக நான்காக உடைந்து விட்டதாகச் சொன்னால் சரியா?

அன்புமணி வகிக்கும் எம்பி பதவி யார் கொடுத்தது? அதிமுக தான் அவரை எம்.பியாக அடையாளம் காட்டியது. அதையெல்லாம் மறந்து விட்டுப் பேசலாமா? இனியும் எங்களைச் சீண்டினால், தக்க பதிலடி தருவோம்' என்கிறார் ஜெயக்குமார்.

அன்புமணியின் கருத்துக்கு அதிமுக இவ்வளவு ஆவேசமாக பதிலளித்தது ஆச்சரியத்தை ஏற்படுத்தியதென்றால், அதைவிட ஆச்சரியம் பாமகவின் பதிலடி. உடனடியாக செய்தியாளர்களைச் சந்தித்த அக்கட்சியின் செய்தித் தொடர்பாளரும் வழக்கறிஞருமான பாலு, அதிமுகவிற்கு பாமக உதவிய தருணங்களைச் சுட்டிக்காட்டினார்.

`அதிமுக பிளவுபட்டிருக்கிறதென்பது சாதாரண குழந்தைக்குக் கூட தெரிந்த விஷயம். இதனை நாங்கள் எங்கள் கட்சிக் கூட்டத்தில் பரிமாறிக் கொள்கிறோம். இதைப் பற்றி ஜெயக்குமார் பேசும்போது 1998ல் பாமகவுக்கு நாங்கள் தான் சீட் கொடுத்தோம்,

அன்புமணி ராமதாஸ் நாடாளுமன்ற உறுப்பினராவதற்கு நாங்கள் தான் காரணம் என்கிறார். அன்புமணி ராமதாஸ் நாடாளுமன்ற உறுப்பினராக இவர் எந்த வகையில் காரணம்? முதலில், இவர் யார்? உடன்படிக்கையின்படி அந்த இடம் பாமகவுக்கு வழங்கப்பட்டது.

அந்த இடத்தை யாருக்கு வழங்குவதென்பதை கட்சித் தலைமை முடிவு செய்து, அன்புமணி ராமதாஸக்கு வழங்கியது. எங்களால் தான் நாடாளுமன்ற உறுப்பினர்களானார்கள், சட்டமன்ற உறுப்பினர்களானார்கள் என்று சொல்வதை அவர்கள் வழக்கமாக வைத்திருக்கிறார்கள்.

ஆனால், 1996ஐ அவர்கள் திரும்பிப் பார்க்க வேண்டும். ஆட்சியிலிருந்த அதிமுக பெற்ற இடங்கள் நான்கு. தனித்து நின்ற பாமக பெற்ற இடங்களும் நான்கு. 1998ல் அ.தி.மு.க. பலவீனப்பட்டிருந்த போது, தேனாம்பேட்டையில் இருக்கக்கூடிய எங்கள் கட்சி அலுவலகத்திற்கு வந்து ஜெயலலிதா கூட்டணி அமைத்ததால் தான் நாடாளுமன்ற தேர்தலில் அவர்கள் வெற்றி பெற்றார்கள். எப்போதெல்லாம் அதிமுக பலவீனப்பட்டு, உயிர் போயிருக்கக் கூடிய நேரமாக இருந்திருக்கிறதோ, அப்போதெல்லாம் உயிர் வழங்கக்கூடியவர்களாக பாமகவினர் விளங்கியிருக்கிறோம்.

1998ல் அந்த முடிவை எடுக்கவில்லையென்றால், அதிமுக பெரும் சரிவை சந்தித்திருக்கும். 2001ல் கூட்டணி வைக்க ராமதாசுக்காக ஜெயலலிதா வழிமேல் விழி வைத்து காத்திருந்தார்.

`எங்களால் தான் அதிமுக ஆட்சிக்கு வந்தது, எங்களால் தான் எடப்பாடி பழனிசாமி முதல்வராக இருந்தார், ஜெயக்குமார் இரண்டு ஆண்டுகள் அமைச்சராக இருந்தார்' என நாங்கள் ஒருபோதும் சொல்வதில்லை. ஆகவே, ஜெயக்குமார் பாமகவை விமர்சிக்கும் போது, கடந்த காலத்தில் பாமகவின் பங்களிப்பு என்ன என்பதைப் புரிந்து கொண்டு பேச வேண்டும்.

ஒரு கூட்டணியில் இருக்கும் இருவரும் தான் பயனடைகிறார்கள். அ.தி.மு.கவினர் தங்கள் கட்சிக்குள் குழப்பம் இல்லையென்றால் ஏன் நீதிமன்றம் செல்கிறார்கள்? இதை நினைவுட்ட வேண்டிய நிலையை ஏற்படுத்தியது ஜெயக்குமார் தான்' என கடுமையாக ஜெயக்குமாரை விமர்சித்தார் வழக்கறிஞர் கே. பாலு.

# கூட்டணிக் கட்சிகள் இல்லாமல் தேர்தலைச் சந்திக்க தி.மு.க தயாரா?

கூட்டணி வைக்காமல் தேர்தலை சந்திக்க தி. மு. க. தயாரா என்று முதல்வர் மு. க. ஸ்டாலினுக்கு பா. ஜ. க. மாநிலத்தலைவர் கே. அண்ணாமலை கேள்வி எழுப்பியுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்,

1967இல் தி. மு. க. முதல் முறையாக ஆட்சிக்கு வந்தது, அதனுடைய சொந்த பலத்தால் அல்ல. சுதந்திர கட்சி மற்றும் மார்க்சிஸ்ட் கட்சிகளினுடனான கூட்டணியின் காரணமாகத் தான். 2021இல் தி. மு. க. ஆட்சிக்கு வந்ததும் அதன் தனி பலத்தால் அல்ல. 12 கட்சிகளுடன் கூட்டணி வைத்ததால் மட்டும். 1967இலிருந்து தி. மு. க. ஒரு தேர்தலில் கூட தனித்துப் போட்டியிட்டதில்லை. தங்கள் அரசியல் ஆதாயங்களுக்காக பல கட்சிகளுடன் கூட்டணி சேர்ந்தே போட்டியிட்டிருக்கிறது. இப்படி பல கட்சிகளுடன் கூட்டணி சேர்ந்தும், தி. மு. க. படுமோசமான தோல்வியைச் சந்தித்த தேர்தல்களும் உண்டு.

யதார்த்தத்தை எதிர்கொள்ளுங்கள் மு.க. ஸ்டாலின்.துணைப் பிரதமராகும் உங்களின் இலட்சியம் கலைந்து போய் நெடுங்காலம் ஆகி விட்டது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையில், பா. ஜ. க. 2024 ஆம் ஆண்டு தேர்தலிலும் மாபெரும் வெற்றி பெறும். தமிழக பா.ஜ. க. கடந்த காலங்களில் தனித்துப் போட்டியிட்டதுண்டு. இனி வரும் காலங்களில், அதை மீண்டும் செய்யத்



தயங்காது. நான் உங்களுக்கு சவால் விடுகிறேன். கூட்டணி இல்லாமல் போட்டியிட தி.மு. க. தயாரா? என்றார். தமிழகத்தில் பா. ஜ. க.தனித்துப் போட்டியிட்டால் ஒரு தொகுதியில் கூட வெற்றி பெற முடியாது என்று முதல்வர் ஸ்டாலின் கூறியிருப்பதற்கு அண்ணாமலை இவ்வாறு கூறியுள்ளார்.

# அண்ணனை யாராலும் விலைக்கு வாங்க முடியாது - பிரியங்கா புகழாரம்



காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல்காந்தி பாரத் ஜோடோ யாத்திரை என்ற பெயரில் இந்திய ஒற்றுமை யாத்திரை மேற் கொண்டு வருகிறார். கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை 3 ஆயிரத்து 500 கிலோமீட்டர்கள் பாத யாத்திரையாக செல்லும் இந்த பயணம் 150 நாட்கள் நடைபெறுகிறது. தமிழ்நாட்டின் கன்னியாகுமரியில் கடந்த ஆண்டு செப்டம்பர் 7-ம் தேதி தொடங்கிய இந்த யாத்திரை கேரளா, கர்நாடகா, மராட்டியம், ராஜஸ்தான், அரியானா உள்பட பல்வேறு மாநிலங்கள் வழியாக கடந்த 24-ம் தேதி டெல்லியை சென்றடைந்தது. பின்னர், கடந்த 24-ம் தேதி டெல்லி செங்கோட்டையில் ராகுல்காந்தி உரையாற்றிய பின் கிறிஸ்துமஸ், புத்தாண்டையொட்டி பாரத் ஜோடோ யாத்திரை ஒத்தி வைக்கப்பட்டது.

இதனையடுத்து, பாரத் ஜோடோ யாத்திரை மீண்டும் தொடங்கியது. டெல்லியில் தொடங்கிய யாத்திரை தற்போது உத்தரபிரதேச மாநிலத்திற்குள் நுழைந்துள்ளது. இந்த யாத்திரையில் இந்திய உளவு அமைப்பான `ரா'வின் முன்னாள் தலைவர் அமர்ஜித் சிங் துலெட் இன்று பங்கேற்றார். இந்நிலையில், டெல்லியில் இருந்து யாத்திரை உத்தரபிரதேசத்திற்குள் நுழைந்தது. அப்போது, உத்தரபிரதேச காங்கிரஸ் பொறுப்பாளராக உள்ள பிரியங்கா காந்தி யாத்திரையை வரவேற்றார்.

உத்தரபிரதேசத்தின் லோனி பகுதியில் ராகுல்காந்தியின் யாத்திரையில் பங்கேற்ற பிரியங்கா காந்தி அங்கு நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார். நிகழ்ச்சியில் அவர் பேசுகையில், உத்தரபிரதேசத்திற்குள் பாரத் ஜோடோ யாத்திரையை வரவேற்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். 3 ஆயிரம் கிலோமீட்டர் நடைபயணம் மேற்கொண்ட பின் யாத்திரை உத்தரபிரதேசம் நுழைந்துள்ளது. அன்பான மூத்த அண்ணா உன்னை நினைத்து நான் பெருமைபடுகிறேன்.

உனக்கு எதிராக அனைத்து சக்திகளும் முயற்சிக்கப்பட்டுள்ளன. உங்கள் நற்பெயரை அளிக்க மத்திய அரசு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் செலவு செய்து வருகிறது. ஆனால், நீங்கள் பின்வாங்கவில்லை. அதானியும், அம்பானியும் தலைவர்களை விலைக்கு வாங்குகின்றனர். பொதுநிறுவனங்களை வாங்கி வருகின்றனர். ஊடகத்தை வாங்கி வருகின்றனர். ஆனால், எனது அண்ணனை அவர்களால் வாங்க முடியவில்லை. அவரை யாராலும் வாங்கவும் முடியாது. என் அண்ணனை நினைத்து நான் பெருமைபடுகிறேன்' என்றார்.

# புலிகளுக்குப் புத்துயிரா?

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு மீண்டும் புத்துயிர் கொடுக்க முயற்சி. அதற்காக நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் கைது என இலங்கை அரசாங்கம், இராணுவம், இராணுவப் புலனாய்வுப் பிரிவுகள் தகவல்களை வெளியிடுவது தான் வழக்கம்.

.இப்போது அவ்வாறானதொரு செய்தி இந்திய ஊடகங்களில் வெளியாகியிருக்கிறது. அந்தச் செய்தியைக் கொடுத்திருப்பது இந்தியப் புலனாய்வுத்துறை வட்டாரங்கள். புலம் பெயர் தமிழர்கள் தான். இந்த முயற்சியில் ஈடுபடுகின்றனர் என கடந்த 14 ஆண்டுகளில் பல முறை செய்திகள் வெளிவந்து விட்டன. ஆனால், இப்போது இந்திய புலனாய்வு வட்டாரங்கள் கசிய விட்டுள்ள தகவல்களின்படி, விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு மீளுயிர் கொடுக்க முனைவது பாகிஸ்தான் புலனாய்வுப் பிரிவான ஐ.எஸ்.ஐ.



இந்த நிலையில், விடுதலைப் புலிகளை இந்தியாவிலும் இலங்கையிலும் மீள உயிர்ப்பிப்பதால், பாகிஸ்தான் புலனாய்வு அமைப்புக்கு என்ன இலாபம்? என்ற கேள்வியும் குழப்பமும் பலருக்கு இருக்கிறது. ஏனென்றால், விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்கு, தொடக்கம் முதல் இறுதிவரை உதவி வந்த நாடு பாகிஸ்தான். விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு இந்தியா உதவியிருந்தாலும், விடுதலைப் புலிகளுக்குப் பயிற்சிகள், ஆயுதங்களைக் கொடுத்து, ஆரம்பத்தில் வளர்த்து விட்டது இந்தியா தான்.

பாகிஸ்தான் அவ்வாறில்லை. 1986இல் ஜனாதிபதியாக இருந்த ஜெனரல் ஷியா உல்ஹக், இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட பின்னர், விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க சிறப்புப் படையினருக்கான பயிற்சிகள், ஆயுதங்களை வழங்கத் தொடங்கியது பாகிஸ்தான்.

இலங்கைப் படையினர் நெருக்கடியில் சிக்கியிருந்த ஒவ்வொரு தருணத்திலும் பாகிஸ்தானே கை கொடுத்தது. ஆனையிறவின் வீழ்ச்சிக்குப் பின்னர், 2000ஆம் ஆண்டு மே மாதம் விடுதலைப் புலிகள் அரியாலை, தனங்கிளப்பில் தரையிறங்கி, தென்மராட்சி நோக்கியும், யாழ். நகரை நோக்கியும் முன்னேறிக் கொண்டிருந்த கட்டத்தில் யாழ்ப்பாணத்தில் 40 ஆயிரம் படையினர் சிக்கிக் கொள்ளும் நிலை உருவானது.

உளவியல் ரீதியாகப் படையினர் சோர்ந்திருந்த போது, பாரிய சரணடைவு ஒன்றும் எதிர் பார்க்கப்பட்டது. அந்த தருணத்தில் பாகிஸ்தானிடம் இருந்து பல்குழல் பீரங்கிகள் அவசரமாக யாழ்ப்பாணத்தில் கொண்டு வந்து இறக்கப்பட்டன. அவற்றைக் கொண்டு நடத்திய தாக்குதல்களினால் தான் அப்போது யாழ்ப்பாணத்தை அரச படைகளால் தக்க வைக்க முடிந்தது.

2008ஆம் ஆண்டு இறுதிக் கட்டப் போர் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்த போது, படையினர் மாங்குளத்தை அண்டிய பகுதிகள் வரை முன்னேறியிருந்தனர். அப்போது இராணுவத்தினரிடம் ஆட்டிலறி மற்றும் மோட்டார் குண்டுகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டது. அவற்றைத் தருவிக்கும் வரையில் போரை நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

அத்தருணத்தில் இராணுவத் தளபதியாக இருந்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தனிப்பட்ட முறையில், விடுத்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு, அவசரமாக பாகிஸ்தானில் இருந்து ஆட்டிலறி மோட்டார் குண்டுகள் அனுப்பி வைக்கப்பட்டன. அந்த ஆட்டிலறி, மோட்டார் குண்டுகள் பாகிஸ்தானின் இராணுவக் களஞ்சியங்களில் இருந்தே அனுப்பி வைக்கப்பட்டன. அவர்களின் தேவைக்காக வைக்கப்பட்டிருந்தவை அவை.

எந்த நாடும் தங்களின் பாதுகாப்புத் தளபாடங்களை விற்பனைக்காக வைத்திருந்தால் அல்லது மேலதிகமாக வைத்திருந்தால் அவற்றை வேறு நாடுகளுக்கு வழங்கும்.தனது இராணுவத்தின் தேவைக்காக களஞ்சியப்படுத்தி வைத்திருப்பதை கொடுக்காது. இந்திய எல்லை எப்போதும் பதற்றமாகவே இருந்து வந்தாலும் பாகிஸ்தான் இராணுவம் தனது கையிருப்பில் இருந்த குண்டுகளை வழங்கியது.

அப்போது, படை நடவடிக்கையை இடைநிறுத்தியிருந்தால், புலிகள் தங்களை மீளமைத்துக் கொண்டு தாக்கியிருப்பார்கள் என பின்னர் சரத் பொன்சேகா கூறியிருந்தார். அண்மையில் ஜெனரல் கமல் குணரத்ன தலைமையிலான பாதுகாப்பு அதிகாரிகள் குழு, பாகிஸ்தான் சென்றிருந்த போது, தாங்கள் வழங்கிய ஆயுதம் தான் விடுதலைப் புலிகளை தோற்கடிக்க உதவியது என்று பாகிஸ்தான் ஆயுத உற்பத்தி நிறுவனம் ஒன்றின் முகவர் கூறியிருந்தார்.

அவர் குறிப்பிட்ட அந்த ஆயுதம், 40 மில்லி மீற்றர் தன்னியக்க பிகே கிரனேட் லோஞ்சர். இதுபோன்ற நவீன ஆயுதங்களை இலங்கை இராணுவத்துக்கு நெருக்கடியான தருணங்களில் கொடுத்து உதவியது பாகிஸ்தான். அப்படிப்பட்ட பாகிஸ்தான், விடுதலைப் புலிகளை உயிர்ப்பிக்க முனைகிறது என்ற செய்தி நம்ப முடியாதது.

விடுதலைப் புலிகளுக்கு மீளுயிர் கொடுப்பதன் மூலம், இந்தியாவுக்கு நெருக்கடி கொடுக்க, பிராந்தியத்தில் அமைதியைக் குலைக்க பாகிஸ்தான் திட்டமிடுகிறது என்பது இந்திய ஊடகங்களின் அல்லது புலனாய்வுப் பிரிவின் கண்டுபிடிப்பு.

விடுதலைப் புலிகளால் நேரடி அச்சுறுத்தலை எதிர் கொள்ளக் கூடியது இந்தியா அல்ல இலங்கை தான். வேலுப்பிள்ளை பிரபாகரனுக்குப் பின்னர், விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு மீளுயிர் கொடுக்கப் பலர் முயன்றது உண்மை. ஆனால் அவையெல்லாம் முளையிலேயே கிள்ளியெறியப்பட்டன. இலங்கைப் புலனாய்வு அமைப்புகள் மாத்திரமன்றி, இந்தியா மற்றும் பிற நாடுகளின் புலனாய்வு அமைப்புகளும் அதற்கு ஒத்துழைப்புக் கொடுத்திருந்தன.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இராணுவச் செயற்பாடுகள் முடங்கி 14 ஆண்டுகளாகி விட்டன. பிரபாகரனைப் போன்ற ஆளுமையானதொரு தலைமைத்துவம் கிடைக்காத வரை விடுதலைப் புலிகளுக்கு மீளுயிர் கொடுக்க முடியாது. 2009இற்குப் பின்னர் நிலைமைகள் எவ்வளவோ மாறி விட்டது. போர் ஒன்றின் மூலம் தீர்வை அடைய முடியும் என்ற நம்பிக்கை இப்போது தமிழர்களிடம் இல்லை. இவ்வாறான நிலையில், பாகிஸ்தான் புலனாய்வு அமைப்போ, இந்திய புலனாய்வு அமைப்போ மட்டும் நினைத்து விட்டால், புலிகளுக்கு மீளுயிர் கொடுக்க முடியாது. போதைப்பொருள் கடத்தல் கும்பல் ஒன்றை தனது தேவைகளுக்கு பாகிஸ்தான் புலனாய்வு அமைப்பு பயன்படுத்திக் கொண்டிருக்கலாம். அவ்வாறு கைது செய்யப்பட்டவர்களைத் தான் இந்திய புலனாய்வு அமைப்பான என்.ஐ.ஏ கைது செய்திருக்கிறது.

அந்த 9 பேரில் ஒருவர் இந்தியர். ஏனையவர்களில் சிங்களவர், முஸ்லிம், தமிழர் என பலரும் உள்ளனர். விடுதலைப் புலிகளுக்கு புத்துயிர் கொடுக்க சிங்களவரின் உதவியை எவரேனும் நாடுவார்களா? என்ற கேள்வியைக் கூட எழுப்பாமல் இவ்வாறான கதைகள் கட்டப்படுகின்றன. போதைப்பொருளுடன், துப்பாக்கிகளையும் ஏற்றிய படகு ஒன்று கைப்பற்றப்பட்டிருந்தது உண்மை.

பாகிஸ்தான் புலனாய்வு அமைப்பு புலிகளுக்கு உதவ விரும்பியிருந்தால், அல்லது புலிகளை உயிர்ப்பிக்க நினைத்திருந்தால், நேரடியாக ஆயுதங்களையும், நிதியையும் வழங்கியிருக்கும். போதைப் பொருட்களை கொடுத்திருக்காது. அதனை விற்று, நிதியைத் திரட்டுவது கடினம். அதற்குள் ஏற்படக் கூடிய ஆபத்துகளால் தங்களின் முயற்சிகள் கெட்டு விடும் என்றே எந்தவொரு புலனாய்வு அமைப்பும்

சிந்திக்கும். ஆனால் பாகிஸ்தான் புலனாய்வு அமைப்பு போதைப் பொருட்களை கொடுத்து அனுப்பியிருக்கிறது. இது.

கட்டுரையாளர்:
கொழும்பில் இருந்து
– சுபத்ரா –

நிதியை திரட்டுவதற்கான உத்தியாக மட்டுமல்ல, போதைப்பொருள் அடிமைகளை உருவாக்கும் திட்டமும் கூட. கடத்தல் குழுவினரிடம் இருந்த துப்பாக்கிகள், பாகிஸ்தான் புலனாய்வு அமைப்பின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டவையாக இருக்கலாம்.

விடுதலைப் புலிகள் மீது பாகிஸ்தானுக்கு அனுதாபமும் இல்லை. அவர்களை உயிர்ப்பிப்பதால் இந்தியாவுக்கு பெரும் பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. விடுதலைப் புலிகள் தொடர்பாக இந்தியா கவலைப்பட்ட காலம், பிரபாகரனுடன் முடிந்து விட்டது. அதேவேளை விடுதலைப் புலிகளை உயிர்ப்பிப்பதென்பது இலங்கையின் பாதுகாப்புடன் தான் நேரடியாக தொடர்புபடும். அது இலங்கைக்கே அச்சுறுத்தலாகும். அவ்வாறான நிலை ஏற்பட்டால் அது இந்தியாவுக்கே சாதகமாக அமையும். குறிப்பாக, ஐ.எஸ்.ஐ. அமைப்பு இதனுடன் தொடர்புபட்டிருக்கிறது என்பது வெளியே தெரியவந்தால், இலங்கையுடனான பாகிஸ்தானின் உறவுகள் பாதிக்கப்படும். போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய கும்பலுக்கும் பாகிஸ்தான் புலனாய்வு அமைப்புக்கும் தொடர்புகள் இருந்திருக்கலாம். அது பற்றி இந்திய புலனாய்வு துறை விசாரணைகளை முன்னெடுத்திருக்கலாம்.

ஆனால், இதற்குள் விடுதலைப் புலிகளைக் கொண்டு வந்திருப்பது, வெறும் பிரசார நோக்கிலான செயற்பாடு தான். கவனத்தை திசை திருப்ப புலனாய்வு அமைப்புகள் இவ்வாறு செய்வதுண்டு. அதனைத் தான் இந்திய புலனாய்வு அமைப்பும், இந்திய ஊடகங்களும் செய்ய முயற்சிக்கின்றனவா?

**ஸ்காபரோவில் வயோதிப மாதுவை வீட்டில் வைத்து பகலில் பராமரிக்க ஒருவர் உடனடியாகத் தேவை**

ஸ்காபரோவில் கெனடி - பின்ஞ்ச் பகுதியில் நல்ல வசதிகளுடன் அமைந்துள்ள வீட்டில் உள்ள வயோதிபத் தாய் ஒருவரை காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பராமரிக்க ஒருவர் உடனடியாகத் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- பரா 416 841 9600

# இனப்பிரச்சனைக்கான தீர்வில் தென்னிலங்கையின் ஆதரவுத் தளம் ரணிலுக்கு இருக்கின்றதா?

கட்டுரையாளர்:
- நடராஜா ஜனகன் -

தொடரும் யுக்ரைன் ரஷ்ய போர் காரணமாக உலகப் பொருளாதார நிலை மேலும் மேலும் சிக்கல் நிலைகளை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. நாடுகளுக்கிடையேயான முரண்நிலைகள் மூன்றாம் உலகப்போர் ஒன்றை தோற்றுவித்து விடுமோ என்ற அச்சநிலை தோற்றம் பெற்று வருகிறது.

ஜப்பான் தனது பாதுகாப்பு செயற்பாடுகளுக்கு மேலும் 52 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியிருக்கிறது. வடகொரியா–தென் கொரியா முரண்நிலை எந்த நேரத்திலும் போராக மாறும் நிலை காணப்படுகிறது. தாய்வான் சீன தகராறு போர் ஒத்திகை என்ற நிலைக்கு வந்துள்ளது.

கொசேவோ நாட்டு எல்லையில் சேர்பிய படைகள் குவிக்கப்பட்டுள்ளன. இவ்வாறாக நாடுகளுக்கு இடையிலான முரண் நிலைகள் நாளுக்கு நான் விரிவடைந்து வருகின்றன. மீண்டும் கொரோனா பெருந்தொற்றின் அபாயம் சீனாவை ஆட்டிப் படைக்கிறது. இது ஏனைய நாடுகனிலும் தாக்கத்தை செலுத்தும் ஏது நிலை இருப்பதால் நாடுகள் தற்பாதுகாப்பு நிலையை நோக்கி நகரத் தொடங்கியுள்ளன. காலநிலை மாற்றம் தொடர்பான அளர்த்தங்களினால் ஐரோப்பிய நாடுகள் வளர்ச்சி அடைந்த நாடுகள் பெரிய அளர்த்தங்களை எதிர்நோக்கி வருகின்றன.

தலைமையில் ஐந்து அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து மேற்படி கலந்துரையாடலில் எப்படி முகம் கொடுப்பது என்பது தொடர்பாக ஆலோசனைகளை நடத்தி வருவதுடன், எதிர்காலத்தில் நடைபெறப் போகும் தேர்தல்களில் ஒன்றிணைந்து போட்டியிடுவதன் அவசியத்தையும் விவாதித்து வருகின்றனர்.





குறிப்பாக விரைவில் நடை பெறலாம் என எதிர்பார்க்கப் படும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் எத்தகைய அணுகுமுறைகள் கடைப்பிடிக் கப்பட வேண்டும் என்பது இந்த பேச்சுக்களில் இணைந்திருப்பதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

கௌரவத்தை வழங்கி அதில் பங்கேற்க தயாராகி வரும் தமிழ் தலைமைகள் தீர்வு தொடர்பான விடயத்தில் இந்திய மத்தியஸ்தத்தின் அவசியத்தை வலியுறுத்தி வரும் நிலையில் இதற்கு எதிரான தரப்பினர் இவர்கள் இந்தியாவின் முகவர்கள் என்றும் தமிழ் தேசத்தின் விடுதலையை இவர்கள் காட்டி கொடுத்து விட்டார்கள் என்ற குற்றச்சாட்டையும் இவர்கள் மீதும் தொடர்ந்து சுமத்தி வருகின்றனர்,'

தென்னிலங்கை அரசியல் களத்தை பொறுத்த வரையில் பேரினவாத தள அரசியல் மிகவும் பலவீன நிலைக்கு சென்றுள்ளது. தமிழர் தேசத்திற்கு எத்தகைய தீர்வையும் வழங்கக் கூடாது

குறிப்பாக வட அமெரிக்கா, கனடா, ஜப்பான் போன்ற நாடுகள் அதிக இழப்புக்களை சந்தித்து வருகின்றன. வறட்சி காரணமாக ஆபிரிக்க கண்டம் பல்வேறு நெருக்கடி களுக்கு முகம் கொடுத்து வருகிறது.

இலங்கை போன்று உலகில் 54 நாடுகள் வங்குரோத்து நிலையை நோக்கி நகர்வதாக உலக வங்கி எச்சரித்துள்ளது. இத்தகைய சூழ்நிலையில் இலங்கையில் தேசிய இன பிரச்சினைக்கான தீர்வை நோக்கி நாட்டின்



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தொடர் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார்.

இரண்டு சுற்று பேச்சுவார்த்தைகள் முடிவுற்றுள்ள நிலையில். ஜனவரி மாதத்தில் தொடர் பேச்சுவார்த்தைகள் இடம்பெற போவதாக அறிவிப்புகள் வெளியாகியுள்ளன.மேலும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் நான்காம் திகதிக்கு முன்பாக அதாவது சுதந்திர தினத்துக்கு முன்பாக தமிழர் பிரச்சினை தொடர்பான விடயத்தில் ஒரு தீர்வை எட்ட வேண்டும் என ரணில் விக்ரமசிங்க ஒரு கால வரையறையும் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் தமிழரசு கட்சி

இது ஒருபுறம் இருக்க சில தரப்பினர் ரணில் விக்ரமசிங்கவிற்கு தீர்வை வழங்க என்ன தகமை இருக்கிறது. அவர் தென்னிலங்கை மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றிடாத தலைவர் என்றும் எனவே இவரது அழைப்பை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அறிக்கைகளை ஊடக அறிவிப்புகளை தொடர்ந்தும் வெளிப் படுத்தி வருகின்றனர்,

மேலும் தமது அரசியல் இருப்புக்களை தக்க வைப்பதற்காக தமிழ் மக்கள் எதிர் நோக்கும் அடிப்படை பிரச்சினைகள் தொடர்பில் சில காட்சிப் படுத்தல் போராட்டங்களையும் ஆங்காங்கே நடத்தி வருகின்றனர். மிகச் சொற்ப மக்களை திரட்டி இப்போராட்டங்களை நடத்தி ஒன்றிணைந்த போராட்ட செயற்பாடுகளுக்கு இடம் வழங்காத நிலையை தொடர்ந்து பேணி வருவதுடன், சமஷ்டி முறையிலான தீர்வைத் தவிர வேறு எந்த விதமான முன்னெடுப்புகளும் தமிழ் மக்களுக்கு முடிவை பெற்று தராது என்பது இவர்களது வாதமாக இருந்து வருகின்றது. மேலும் ரணில் விக்ரமசிங்கவின் அழைப்பிற்கு

என ரணில் விக்ரமசிங்கவிற்கு எச்சரிக்கை விடும் எல்லே குணவன்ச தேரரின் எச்சரிக்கை சுருதி குறைந்த ஒன்றாகவே காணப்படுகிறது.

மறுபக்கத்தில் மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட தரப்பினர் ஊழல் மோசடி தொடர்பில் அதீத கவனத்தை குவித்து வருவதுடன், தமிழ் தேசிய பிரச்சனை தீர்வு தொடர்பான விடயத்தில் அவர்கள் மௌனம் காத்து வருகின்றனர். அறகளைய போராட்ட காலத்திலும் இத்தகைய தரப்பினர் தமிழ் தேசிய பிரச்சினை தொடர்பில் அடக்கி வாசித்து வந்தனர்.

அண்மையில் பெவ்ரல் அமைப்பினால் நடத்தப்பட்ட நிகழ்வு ஒன்றில் பேராசிரியர் ஜாமினி உயன்கொட கருத்து தெரிவிக்கையில் எதிர்வரும் தேர்தல்களில் ஊழல்களுக்கு எதிரான அணியினர் ஒரு தரப்பாக ஒள் றிணைந்து போட்டியிட்டு நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்க வேண்டுமென கருத்து தெரிவித்திருந்தார். இவர்களின் கருத்துக்களில் தமிழ் தேசிய பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பாக கருத்து நிலைகள் மருந்துக்கு கூட இல்லாத நிலை தொடர்கிறது. மேலும் ரணில் விக்ரமசிங்க மக்கள் அங்கீகாரம் அற்ற தலைவர் என்ற நிலையில் இருப்பதால் அவர் எடுக்க இருக்கும் செயற்பாடுகள் எத்தகைய தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்ற கருத்தியல் சில தமிழ் ஆய்வாளர்கள், அரசியல் தலைவர்கள் ஆகியோரிடம் ஆழமாக வேரூன்றிய நிலை காணப்படுகிறது. ஆனால் இங்கே இவர்கள் பார்க்க தவறும் அம்சம் என்னவென்றால் இன்றைய கால கட்டத்தில் நாடு எதிர்நோக்கும் மிக மோசமான பொருளாதார சூழ் நிலையில் ரணில் விக்கிரமசிங்க இதற்கான அர்ப்பணிப்புடன் செயற் பட்டு வருகின்றார் என்பதையும் இவருக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்ற நிலை பெரும் பான்மை தென்னிலங்கை மக்களிடம் தோற்றம் பெற்றுள்ளது என்பதையும் இதன் காரணமாகவே இரண்டாவது அறகளைய போராட்ட முயற்சி தோல்வியில் முடிந்தவுடன் மீண்டும் ஒரு வெகுஜன எழுச்சி தென்னிலங் கையில் சாத்தியப் படாத நிலை காணப்படுகிறது.

எனவே தமிழ் மக்களின் தீர்வு தொடர்பான விடயத்தில் தென்னிலங்கை மக்களின் ஆதரவு பின்புலம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருப்பதன் காரணமாகவே அவர் இந்த நிலையை நோக்கி நகர்ந்து வருகின்றார். நாட்டின் பொருளாதார நிலையை மேம்படுத்த அவர் எடுத்து வரும் துரித செயற்பாடுகள் மக்கள் ஆதரவு இருந்து வருவதால் தமிழ் தேசிய பிரச்சனைக்கான தீர்வு விடயத்திலும் இந்த நிலை தொடர வாய்ப்புகள் நிறையவே உள்ளன. இன்றைய சூழ் நிலையில் ஒரு சமஷ்டி முறையிலான தீர்வு நிலை என்ற விடயம் சாத்தியப்படாது போனாலும் மாகாண சபைகளுக்கான அதிகாரம் மற்றும் தமிழ் மக்கள் எதிர் நோக்கி வரும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, இராணுவ கையிறுப்பில் இருக்கும் நிலங்களை விடுவித்தல் போன்ற தளங்களில் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன, மேலும் அரச கட்டமைப்புகள் தமிழர் தேசத்தில் மேற்கொண்டு வரும் ஆக்கிரமிப்பு செயற்பாடுகளின் வேகத்தையும் இதன் மூலம் குறைக்க முடியும்.

எனவே இந்தியா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகத்தின் அழுத்தங்கள் தமிழ் தேசிய பிரச்சினை தீர்வு தொடர்பில் தொடர்ந்தும் இருந்து வருவதால் நாட்டின் பொருளாதார நிலை மேம்பட வேண்டின் தமிழ் தேசிய பிரச்சனையிலும் ஒரு இணக்கத்தை நோக்கிய நிலைக்கு அரசாங்கம் செல்ல வேண்டும் என்ற நிலை உறுதி பெற்று வருகிறது.

இலங்கையை பொறுத்த வரையில் அண்மைய வரலாற்றில் தமிழ் தேசிய பிரச்சனைக்கு ஒரு தீர்வை காண வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் ஆர்வத்தை காட்டி வருகிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனுடன் இவர் ஏற்படுத்திய ஒப்பந்தத்தில் இருந்து நல்லாட்சி காலப்பகுதியில் புதிய அரசியலமைப்பு மாற்றம் தொடர்பான செயல்பாடுகள் வரையான காலப்பகுதி என பல்வேறு சூழ்நிலைகளில் தமிழர் தரப்புக்கு ஒரு தீர்வை வழங்கும் நிலையில் அவர் தொடர்ந்தும் இருந்து வருகிறார்.

எனவே இத்தகைய முயற்சிக ளுக்கு ஆதரவை வழங்குவதன் மூலம் எத்தகைய இழப்புகளும் தமிழர் தேசத்துக்கு ஏற்படாது. மாறாக எமக்கான விடுதலை நோக்கிய நகர்விற்கு வலிமை சேர்க்கும் நிலையே நிச்சயம் உருவாகும்.

உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையின்
30வது ஆண்டு விழா:-
23 ஏப்ரல் 2023
“சங்கீத சங்கமம் 2023”

# அமெரிக்கா செல்ல முடியாத நிலை கோத்தபாயவுக்கு ஏற்பட்டது ஏன்?

கட்டுரையாளர்:
ஈழநாட்டிற்காக கொழும்பில் இருந்து
- பார்த்தீபன் -

நான்கு வருடங்களுக்கு முன்னர் ஒரு அமெரிக்க பிரஜையாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இப்போது அமெரிக்கா என்பது ஒரு எட்ட முடியாத கனவாகி விட்டது. அமெரிக்க விசா தனக்குக் கிடைக்கப் போவதில்லை என்பது உறுதியான பின்னணியில் தான் தமது குடும்பத்தினருடன் சில தினங்களை டுபாயில் செலவிடுவதற்குத் தீர்மானித்ததாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2019இல் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக அமெரிக்க குடியுரிமையைத் துறப்பதற்கு துடியாய்த் துடித்த கோட்டாபய இப்போது அமெரிக்க விசிட் விசா என்றையாவது பெற்றுக் கொள்வதற்கு படாதபாடு படுகின்றார். இன்று கோட்டாபயவின் கனவு அது தான். எப்படியாவது அமெரிக்காவுக்கு விசா கிடைத்து போய்ச் சேர்ந்து விட்டால் போதும் என்பது தான். அவரது கனவு நனவாகுமா?

கடந்த 26 ஆம் திகதி திங்கட்கிழமை (2022-12-26) அதிகாலை 2.55 மணியளவில் கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ தனது மனைவி மற்றும் மகனின் குடும்பத்தினருடன் டுபாய் புறப்பட்ட விமானத்தில் ஏறிய போது அவர்கள் அமெரிக்காவுக்குச் செல்கின்றார்கள் என்றே செய்தி பரவியது. பலரும் அதனைத்தான் நம்பினார்கள். ஏனெனில் பல்வேறு செல்வாக்கு மிக்க வட்டாரங்கள் மூலமாக அமெரிக்க விசாவுக்கு அவர் முயற்சி செய்து கொண்டிருந்தார். இருந்த போதிலும் அவர்கள் அமெரிக்கா செல்லவில்லை என்றும் சில தினங்களுக்கு டுபாயில் தான் தங்கியிருப்பார்கள் என்றும் பின்னர் தெரிவிக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து ஐரோப்பிய நாடொன்றில் நிரந்தரமாகத் தங்குவதற்கும் கோட்டாபய திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதுகூட சாத்தியமாகுமாக வில்லை. இந்த நிலையில் இன்னும் சில தினங்கள் கொழும்பு திரும்பி வீட்டுக்குள் முடங்கிக் கிடக்க வேண்டியது 69 இலட்சம் சிங்கள வாக்குகளால் தெரிவான ஜனாதிபதியின் கதியாகப் போகின்றது.

ஐரோப்பிய நாடொன்று கோட்டாபயவை ஏற்றுக் கொள்ளுமா? அவருக்கு அரசியல் தஞ்சமளிக்க முன்வருமா? என்பன பிரதான கேள்விகளாகவுள்ளன. அவ்வாறு தஞ்சம் கிடைக்கவில்லை என்றால் மீண்டும் இலங்கை திரும்புவதை விட அவருக்கு வேறு வழியிருக்கப் போவதில்லை என்பது முன்னரே தெரிவிக்கப்பட்டது தான். மனித உரிமை விவகாரம் ஜெனிவா தீர்மானம் போன்றவற்றால் ஐரோப்பிய நாடுகள் எதுவும் அவருக்கு அடைக்கலம் கொடுக்க தயாராக வில்லை.

கொழும்பில் வெடித்த மக்கள் கிளர்ச்சியை அடுத்து மாலைதீவுக்குத் தப்பிச் சென்ற கோட்டாபய பின்னர் அங்கிருந்து சிங்கப்பூர் சென்று தனது ஜனாதிபதிப் பதவியை ஜீலை 13 ஆம் திகதி ராஜினாமா செய்தார். அப்போது ரணில் விக்கிரமசிங்கவை பதில் ஜனாதிபதியாக நியமித்த அவர் முக்கியமான கோரிக்கை ஒன்றையும் ரணிலிடம் இரகசியமாக முன்வைத்திருந்தார் தான் அமெரிக்கா செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து தாருங்கள் என்பது தான் அவரது கோரிக்கை. ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவுக்கு நெருக்கமான ஒருவராகக் கருதப்படுபவர் அதனால் இதனை ரணிலினால் செய்யக் கூடியதாக இருக்கும் என கோட்டா கருதியிருக்கலாம். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக அமெரிக்க பிரஜாவுரிமையைத் துறந்த கோட்டாபய



பதவியிலிருந்து விரட்டப்பட்ட போது அமெரிக்க வீசாவைக் கூட பெற முடியாத நிலைக்குள்ளானார். இந்த நிலையிலேயே ரணிலின் உதவியை கோட்டா நாடினார்.

ஆனால் கோட்டாவின் விசா விண்ணப்பத்தை நிராகரிப்பது என்பதில் உறுதியாகவிருந்த அமெரிக்க தூதரகத்தைப் பொறுத்த வரையில் ரணிலின் கோரிக்கையை ஏற்கத் தயாராகவிருக்க வில்லை. இதனால் தான் சிங்கப்பூர் தாய்லாந்து என சுற்றித் திரிந்த கோட்டாபய அந்த நாடுகள் தொடர்ந்தும் தனக்குப் பாதுகாப்பை வழங்கத் தயாராகவில்லை என்பதை உணர்ந்த நிலையில் கொழும்பு திரும்புவதற்குத் தீர்மானித்தார்.

மேற்கு நாடுகளிலோ மத்திய கிழக்கு நாடுகளிலோ அரசியல் அடைக்கலம் கோருவதற்கும் கோட்டட்டாபய மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தமையும் கொழும்பு திருப்ப அவரை நிர்ப்பந்தித்தது. மறு பக்கத்தில் தன்னுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கூடிய நிலையில் ரணில் விக்கிரமசிங்க இருக்கின்றார் என்பதையும் உணர்ந்து கொண்ட நிலையில் தான் அவர் கொழும்பு திருப்பும் முடிவை இறுதியாக எடுத்தார்.

மீண்டும் அமெரிக்காவுக்கோ அல்லது மேற்கு நாடு ஒன்றுக்கோ செல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் அவர் இருப்பதற்கு இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஒன்று இலங்கையில் தனக்கு அரசியலில் எதிர்காலம் இருக்கப் போவதில்லை என்பதை அவர் தெளிவாக உணந்து கொண்டிருக்கின்றார். தமது சகோதரர்களே அதனை விரும்பவில்லை என்பதையும் அவர் இப்போது தெரிந்து கொண்டிருக்கின்றார்.

இரண்டாவதாக இலங்கையில் இருப்பது எதிர்காலத்தில் தமது பாதுகாப்புக்கு ஆபத்தாகலாம் என்ற அச்சமும் அவருக்குள்ளது. இதனால் அவரது குடும்பத்தினரும் அவர் தொடாந்தும் இலங்கையில் இருப்பதை விரும்பவில்லை. இதற்கும் இரண்டு காரணங்கள் உள்ளன. முதலாவது மீண்டும் ஒரு முறை போராட்டம் வெடிக்கலாம் என்ற அச்சம். இரண்டாவது ரணிலுக்குப் பின்னர் பதவிக்கு வரக்கூடியவர்கள் விசாரணைகளை ஆரம்பித்தால் கோட்டாவும் சிக்க வேண்டி வரும் என்பது இரண்டாவது பிரச்சினை. இந்தப் பின்னணியில் தான் அமெரிக்காவில் உள்ள அவரது ஒரே மகன் கடந்த வாரம் குடுத்பத்துடன் கொழும்பு வந்து பெற்றோரை டுபாய்க்கு அழைத்துச் சென்றிருக்கின்றார்.

இந்த வேளையில் அமெரிக்க பிரஜைவுரிமையை கோட்டாபய எவ்வாறு பெற்றுக் கொண்டார் என்ற பழைய கதையை திரும்பிப் பார்ப்பதும் சுவாரஸ்யமாக இருக்கும். லெப்டினன்ட் கேணல் நந்தாச கோட்டாபய ராஜபக்ஷ 1990களில் பிரேமதாஸ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இராணுவத்தில் கடமையாற்றியவர் இராணுவத்திலிரு



ந்து விலகி வெளிநாடு செல்வதற்கு அவர் அப்போது திட்டமிட்டார். இராணுவம் தொடர்ந்து சந்தித்து வந்த இழப்புக்கள் தான் இதற்குக் காரணம் என்பது சொல்லத் தேவையில்லை. ஜெனரல் கொப்பேக்கடுவ போன்றவர்கள் கொல்லப்பட்ட நிலையில் தான் அவரது அச்சம் அதிகமாகியது. அப்போது எதிர்க்கட்சியிலிருந்த தன்னுடைய சகோதரர் மகிந்த ராஜபக்ஷவிடம் இதற்கான உதவியை அவர் கோரினார். மகிந்த இந்தப் பொறுப்பை அநுரா பண்டாரநாயக்கவிடம் ஒப்படைத்தார்.

இதற்காக இரண்டு வேலைகளைச் செய்ய வேண்டிய பொறுப்பு அநுராவுக்கு ஏற்பட்டது. முதலாவதாக அப்போதைய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ணவுடன் தொடர்பு கொண்ட அநுரா இராணுவத்திலிருந்து கோட்டாபய வெளியேறுவதற்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டார் இராணுவ அதிகாரி ஒருவர் அதிலிருந்து விலக வேண்டுமானால் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி அவசியம். அதனைப் பெற்றுக் கொண்ட பின்னர் அமெரிக்க தூதரகத்துடன் தொடர்பு கொண்டு கோட்டாபயவும் குடும்பத்தினரும் அமெரிக்கா செல்வதற்கான விசாவையும் அநுரா பண்டாரநாயக்கவே பெற்றுக் கொடுத்தார்.

அமெரிக்கா சென்ற பின்னர் அந்நாட்டுப் பிரஜாவுரிமையைப் பெற்றுக் கொள்வதிலும் கோட்டாபய பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்ததுஅவரது குடும்பத்தினர் அனைவருக்குமே அமெரிக்க பிரஜாரிமை கிடைத்தது.

2005இல் அவர் இலங்கை திரும்பி மகிந்தவின் ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்திற்கு உதவினார். ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த வெற்றி பெற்றதன் பின்னர் கோட்டாபய அமெரிக்கா செல்லவிருந்த வேளையில் பாதுகாப்புச் செயலாளர் பதவியை ஏற்குமாறு கோட்டாவிடம் கோரினார் மகிந்த. அப்போது கோத்தபாய அமெரிக்க குடியுரிமையை கைவிடவில்லை. ஆனால் 2019-ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடிவு செய்த அவர் அமெரிக்க குடியுரிமையை துறந்தார்.

இப்போது சுமhu; ஐந்து மாதங்களாக அமெரிக்க வீசாவைப் பெறுவதற்குக் கூட அவருக்கு முடியாதுள்ளது. கோட்டாபயவால் அமெரிக்காவுக்குச் சென்று அந்த நாட்டின் குடியுரிமையை அவரது மகனும் மனைவியும் பெற்றுக 'கொண்ட போதிலும் கூட அவருக்கும் அமெரிக்க விசா என்பது இன்று எட்டாத ஒரு கனவாகி விட்டது! அமெரிக்க குடியுரிமையைத் துறந்த ஒருவருக்கு அந்நாடு இலகுவில் விசாவை வழங்குவது. அதற்கான நீண்ட நடைமுறையும் விசாரணைகளும் உள்ளது. அதனை விட மனித உரிமைகள் விடயத்தில் கோட்டாபய மீதுள்ள குற்றச்சாட்டுக்களும் அமெரிக்காவின் இறுக்கமான நிலைப்பாட்டுக்கு காரணம்.

கோட்டாபயவின் மனைவியும் மகனும் அமெரிக்க பிரஜாவுரிமையைக் கொண்டவர்கள். அவ்வாறிருந்தும் கூட ஒரு விசிட் வீசாவைக் கூட கோட்டாபயவுக்கு வழங்குவதற்கு அமெரிக்கா தயாராகவில்லை. ஜனாதிபதியாக அனைத்து அதிகாரங்களையும் கொண்ட ஒருவராக இருந்த ஒருவரின் நிலை பதவி பறிபோன பின்னர் இவ்வாறு தான் இருக்கும் என்பதற்கு கோட்டாபய ஒரு உதாரணம்!

அதனால் தான் பதவியை இராஜினாமா செய்யாமல் மாலைதீவு செல்வதற்கும் பின்னர் சிங்கப்பூர் செல்வதற்கும் தனது நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியை கோட்டதபய பயன்படுத்தினார். சிங்கப்பூர் சென்றடைந்த பின்னரே தனது இராஜினாமா கடிதத்தை கோட்டாபய அனுப்பி வைத்தார் என்பது (22ம் பக்கம் பார்க்க)

# வடக்கு மாகாணத்தில் களமிறக்கப்பட்டுள்ள இந்திய - சீனா போட்டியாளர்கள்!

கட்டுரையாளர்
தாயகத்தில் இருந்து
பேராசிரியர்
K.T.கணேசலிங்கம்



இலங்கை அரசியலில் இந்திய-சீனப் போட்டி அதீதமான அரசியலாக மாறி வருகிறது. அதிலும் வடக்கு மாகாணத்தில் அதிகமான அரசியல் நகர்வுகள் அரங்கேறி வருகின்றதைக் காண முடிகிறது. இரு நாட்டுத் தூதரகங்களும் மாறிமாறி செயல்படுவதுடன், அதனை மையப்படுத்தி ஊடகங்களும் அரசியல் செய்வதை காணமுடிகிறது.

வெளிப்படையாகக் கூறுவதானால் தூதரகங்களை விட ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் இரு தூதரகங்களின் அரசியலை அதிகம் முதன்மைப்படுத்துவதை காண முடிகிறது. வட மாகாணத்தில் இயங்கும் உயர்கல்வி நிறுவனங்கள் கூட அத்தகைய அரசியல் நகர்வுகளுக்குள் அகப்படாது இயங்க முடியாதுள்ளன.

இக்கட்டுரையும் சீனா, இந்தியா ஆகிய இரு நாடுகளுக்குள்ளும் அகப்பட்டுள்ள வடக்கு மாகாணம் எதிர்கொள்ளும் நெருக்கடியும் யதார்த்த நிலையையும் தேடுவதாக உள்ளது.

முதலில் வடக்கு, கிழக்கு தமிழர் பிரதேசம் இந்தியா பக்கமா சீனா பக்கமா என்று கேள்வி எழுப்பப்பட்டால் வெளிப்படையாக இந்தியா பக்கம் என்பதற்கான ஆதரவு அதிகமானதாகவே தெரிகிறது. சீனா பக்கம் உள்ள ஆதரவை விட இந்தியா பக்கம் ஆதரவு அதிகம் உள்ளது என்பது வெளிப்படையான உண்மையாகும். அதற்கு பல காரணங்களை அடையாளம் காணமுடியும்.

அதற்காக இந்தியா பக்கம் நியாயமின்றி அல்லது காரணம் இன்றி தமிழ் மக்கள் ஆதரவை வெளிப்படுத்த



வில்லை என்பது போல் இந்தியா பக்கம் உள்ள குறைபாடுகளையும் முன் வைக்காத மக்கள் கூட்டமாக தமிழர் இல்லை என்பதையும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் இந்தியாவை விமர்சனத்துடனேயே அணுகும் வல்லமை கொண்டவர்கள் என்பது கடந்த காலம் முழுவதும் வெளிப்படுத்திய நிலைப்பாடாகும். இனியும். அதனையே தமிழ் மக்கள் கொண்டிருப்பார்கள். இந்தியாவை ஆதரிப்பார்கள் ஆனால் இந்தியா மீது கடுமையான விமர்சனங்களை வெளிப்படுத்தவும் தயங்க மாட்டார்கள்.

அது ஒரு தேசிய வலுவுடைய மக்கள் கூட்டத்தின் இயல்பாகும். மக்கள் கூட்டத்தின் திறனே தேசிய அதிகாரத்தின் மூலக்கூறாகும். அதனை தமிழ் மக்கள் கொண்டுள்ளனர். அகிம்சைப் போராட்டத்தையும் ஆயுதப் போராட்டத்தையும் ஆதரித்தது போல் ஒற்றையாட்சிக்குள் இருந்து கொண்டு சமஷ்டியையும் தனிநாட்டையும் ஆதரித்தவர்களாக தமிழ் மக்கள் உள்ளனர்.

இத்தகைய நிலையிலேயே இந்தியாவை தமிழ் மக்கள் ஆதரிப்பதன் நியாயப்பாடு உள்ளது. இந்தியா புவிசார் அரசியல் கூறாக உள்ளதுடன், இன, மத, கலாசார ரீதியில் தமிழ்நாட்டுடன் உள்ள உற வும் அவர்களை இந்தியாவுடன் பிணைத்துள்ளது. புதுடில்லியின் அரசியல் நலனுக்கு அப்பால் தமிழகத்துடன் கொண்டுள்ள உறவின் கனதி, இந்தியாவை ஆதரிக்க காரணமாக உள்ளது. 1926 ஆம் ஆண்டு மகாத்மா காந்தியின் வருகையும் அதனை அடுத்து இந்திய தேசிய விடுதலைப் போராட்ட வீரர்களின் வருகையும் ஈழத்தமிழர்களது காலனித்துவ அடக்குமுறைக்கு எதிரான உணர்வையும் விடுதலை உணர்வையும் தீவிரப்படுத்தியது.



அவ்வாறே 1962இல் சீனா-இந்திய போரின் போதும் தந்தை செல்வா ஈழத்தமிழ் இளைஞர்களைத் திரட்டி சீனாவுக்கு எதிராக, இந்தியாவுக்கு ஆதரவாக செயல்பட திட்டமிட்டமை என்பன இந்தியாவுடனான ஈழத்தமிழரது உறவினைக் காட்டுகிறது. தமிழ் அரசியல் தலைவர்களும் தமிழ் மக்களும் இந்தியாவுடனான உறவை முதன்மைப்படுத்தியே வந்துள்ளனர். இதன் அடுத்தகட்டமான ஆயுதப் போராட்டமும் தமிழக-ஈழத்தமிழரது உறவினாலேயே வலுவடைந்தது. இலங்கை ஒரு தீவாக அமைந்த போதும் பாக்கு நீரிணையால் பிரிக்கப்பட்ட போதும் தமிழகத்தின் நட்புறவே ஆயுதப் போராட்டத்தையும் அதற்கான பின்தளத்தையும் கொடுத்திருந்தது. அனைத்துஆயுதப் போராட்ட இயக்கங்களும் தமிழகத்தை மையப்படுத்தியே தமது ஆயுதப் போராட்டத்தை உருவாக்கியிருந்தன.

அதன் பின்பே பாலஸ்தீனத்திலும் வட கொரியாவிலும் தமது போர்ப் பயிற்சிகளை கட்டமைத்தனர். அடிப்படையில் பின் தளமாக தமிழகமும் இந்திய மத்தியரசின் ஆயுத தளவாடங்களும் பயிற்சிகளும் விடுதலைப் போராட்டத்திற்கு வழி வகுத்தது. வடக்கும் தமிழகமும் புவிசார் ரீதியில் அருகருகே அமைந்திருப்பதும் (32 மைல்) பாக்குநீரிணை கடற்பகுதி இந்திய அரசினது கண்காணிப்பிலிருந்தமையும் ஆயுதப் போராட்டத்தை எழுச்சியடையச் செய்தது.

காந்தி,நேரு, பட்டேல் மற்றும் இந்திரா காந்தி போன்ற தலைவர்களை தமது தலைவர்களாகக் கருதிய நிலை இந்திரா காந்தியின் மரணம் வரை நிலவியது. அத்தகைய உறவை தமிழர்கள் இன்னுமே மறுதலிக்காதுள்ளனர். ராஜீவ்காந்தியின் படுகொலைக்குப் பின்னரும் தமிழக-ஈழத்தமிழர் உறவு முற்றாக குலைந்து போகவில்லை. இன்றும் கூட 6 கோடித் தமிழரது பலம் ஈழத்தமிழருக்கு உண்டு என்பதை தென்னிலங்கை ஆட்சியாளர்களும் மக்களும் கருதுகின்றனர்.

இத்தகைய பலத்தை தென்னிலங்கை மட்டுமல்ல புதுடில்லியும் மேற்குவகமும் அச்சுறுத்தலாகவே நோக்குகின்றன. ஆனாலும் புதுடில்லி ஈழத்தமிழர் உறவை வேறு எந்த நாட்டுக்கும் விட்டுக் கொடுக்க முடியாது செயல்படுகிறது. அது இந்தியாவினது நவனாகவே தெரிகிறது. ஈழத்தமிழருக்காக அல்லாது புதுடில்லியின் நலனுக்கானதாகவே அத்தகைய விட்டுக் கொடுப்பற்ற போக்கினை இந்தியா கொண்டுள்ளது. அத்தகைய நலனில் தென்னிந்தியா பக்கம் இந்தியா குவித்துள்ள அணுவாயுத கட்டமைப்பு, அண்டவெளி தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில் நுட்பங்களது பாதுகாப்பு முதன்மையாக அமையலாம் அல்லது இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு இன்னோர் அம்சமாக அமையலாம். எதுவாயினும் இந்தியாவினது நலன் சார்ந்ததாகனே ஈழத்தமிழர்- புதுடில்லி உறவு காணப்பட வாய்ப்புள்ளது. இதில் ஈழத்தமிழரது பாதுகாப்பும் தங்கியுள்ளது. அதற்கு தமிழகம் பிரதான பங்கு வகித்தது. 2009 இல் ஈழத்த மிழர் கொல்லப்படுவதற்கு இந்திய மத்திய அரசின் பங்களிப்பு உண்டு என்பதை ஈழத்தமிழர் மட்டுமல்ல தமிழகமும் மறுக்கவில்லை. ஆனாலும் ஈழத்தமிழர் இந்தியா முழுமையாக பகை நாடாக கருதவில்லை. அதுவே ஈழத்தமிழர் புதுடில்லி உறவாகும். இது தமிழகத்தினாலும் கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை கவனத்தில் கொள்தல் வேண்டும். ஈழத்தமிழர் புதுடில்லியை விட தமிழகத்தை அதிகம் நம்புவதுடன், நெருக்கமான அரசியல் உறவை கொண்டு செயல்பட முனைகின்றனர். மறுபக்கத்தில் ஏன் சீனாவுடன் ஈழத்தமிழர்கள் உறவு பலமடையாதுள்ளது என்பது பிரதான கேள்வியாகும். குறிப்பாக சீனாவின் இந்திய எதிர்ப்பு உணர்வு அடிப்படையில் ஈழத்தமிழரது சீன விரோத உணர்வைத் தந்துள்ளது. அதாவது சீன கம்யூனிஸக் கொள்கையானது, ஈழத்தமிழரது சமூகக் கட்டமைப்பினால் நிராகரிக்கப்பட்டதொன்றாகவே தெரிகிறது. ஈழத்தமிழர் மத்தியில் பொன். கந்தையாவைத் தவிர வேறு எந்தஓர் இடதுசாரியும் மக்களால் தெரிவு செய்யப்படவில்லை. ஈழத்தமிழர் இயல்பால் நிலச்சு வாந்தர்களாகவும் சாதி, மத உணர்வுகளாலும் கட்டமைக்கப்பட்ட சமூகத்தை உடையவர்கள். அவர்களது ஆயுதப் போராட்டமும் அத்தகைய மரபுகளை முற்றாக புறமொதுக்கியதெனக் கூறிவிட முடியாது.

சோசலிஸ தமிழீழத்தில் தொடங்கி முதலாளித்துவ தமிழீழத்திலேயே நிறைவு செய்தார்கள் என்பது மறுக்க முடியாதது. இத்தகைய சமூகத்தினது எண்ணத்தில் சீனாவின் சோசலிஸமோ, கம்யூனிஸமோ உறவு கொள்வதென்பது கடினமானது. தற்போது சீனா சோசலிஸத்திலிருந்து வெகு தூரத்தில் இருந்தாலும் அதனடிப்படையும் அரசியலும் சோசலிஸமாகவே ஈழத்தமிழர் புரிந்துவைத்துள்ளனர்.

அது மட்டுமல்ல இந்தியா போன்று சீனாவும் 2009 ஈழத்தமிழர் அடைந்த துயரத்திற்கு காரணமாக இருந்தது என்பதை ஈழத்தமிழர் கொண்டுள்ளனர். ஆனால் அதனைக் கடந்து சீனா ஜெனீவா அரங்கிலும் மனித உரிமைப் பேரவையிலும் சீனா தென்னிலங்கையையும் அதன் ஆட்சியாளர்க ளையும் பாதுகாத்து வருகிறது. ஈழத்தமிழர் மீது தென்னிலங்கை மேற்கொண்ட மனித உரிமை மீறல்களுக்கும் மனிதாபிமானச் சட்ட மீறலுக்கும் நிகழ்த்திய இன அழிப்புக்கும் எந்த கேள்வியுமின்றி சீனா ஆதரிக்கிறது என்பதை ஈழத்தமிழர் மறுக்க முடியாதுள்ளனர்.

ஆயுத தளவாடங்களைக் கொடுத்து போரை நடத்தியது மட்டுமன்றி அதற்குப் பின்னரும் தென்னிலங்கையின் அனைத்து நகர்வுகளுக்கும் கண்ணை மூடிக் கொண்டு சீனா ஆதரிக்கிறது என்பதை ஈழத்தமிழர் மறக்க முடியாதுள்ளனர். சீனாவிடம் ஜனநாயகம் இல்லை என்பதும் மனித உரிமையும் மனிதாபிமான நடைமுறையும் இல்லை என்பதையும் ஈழத்தமிழர் நன்கு புரிந்து வைத்துள்ளனர். சீனா ஓர் இரும்புத் திரை அரசியலைக் கொண்டதென்பது தினமென் சதுக்கப் படுகொலையின் மூலம் விளங்கிக் கொள்ளக் கூடியதொன்றே. மனித உறவு மட்டுமல்ல நாடுகளுக்கிடையிலான உறவும் பொருள் சார்ந்ததென்றாலும். அது தனித்து பொருளாதாரத்தால் கட்டமைக்கப்படுவதல்ல.

மாறாக, மனித உணர்வினாலும் நட்புறவாலும் தாராளவாதத்தாலும் கட்டமைக்கப்பட்டதென்பதை புரிந்து கொள்வது அவசியமானது. ஆனால் சீனாவோ பொருளாதாரமாக அனைத்தையும் நோக்கும் ஒரு தேசமாக உள்ளது என்பது ஈழத்தமிழருக்கு தெரியாததொன்றல்ல.

சீனா ஈழத்தமிழரது சுயநிர்ணயத்திற்கான, சமத்து வத்திற்கான, சுதந்திரத்திற்கான கோரிக்கை பற்றி எத்தகைய கொள்கையைக் கொண்டுள்ளது என்பதை திபெத்தியர் மற்றும் உர்குர் முஸ்லிம்கள் சார்ந்து புரிந்து கொண்டுள்ளனர். சீனாவின் வெளியுறவுக் கொள்கை ஈழத்தமிழரது சமஷ்டியையோ, அக-சுயநிர்ணயத்தையோ அங்கீகரிக்காது என்பதை ஈழத்தமிழர் புரிந்துள்ளனர். அது மட்டுமன்றி ஈழத் தமிழர் ஒரு தேசியமாகவோ, தேசிய இனமாகவோ சீனா கருதாது என்பதையும் புரிந்து வைத்துள்ளனர்.

ஆனால் எதிர்கால உலகம் சீனாவுக்குள் அடங்கி விடும் என்ற சந்தேகமும் ஈழத் தமிழரிடம் இல்லாமலில்லை. இந்து சமுத்திரம் மீதான சீனாவின் செல்வாக்கு அதீதமாக வளர்ச்சியடைகிறது என்பதையும் இந்தியா பலவீனமான நாடாக உள்ளது என்பதையும் உணர முடிகிறது. இந்து சமுத்திரம் மீதான போட்டியே வடக்கு, கிழக்கு மீதான இந்திய-அமெரிக்க-குவாட் எதிர் சீனப் போட்டியை உருவாக்கியுள்ளது என்பதையும் ஈழத்தமிழர் விளங்கிக் கொள்ளாமல் இல்லை என்பதும் கவனத்திற்குரியதாகும்.

இவையே சீனா மீதான ஈழத்தமிழரது உறவிற்கு தடையான விடயங்களாக உள்ளது. இந்தியாவை ஆதரிக்கவும் சீனாவை எதிர்க்கவும் பல காரணங்கள் உள்ள போதும் விமர்சனத்துடனே ஈழத்தமிழர் அனைத்தையும் நோக்குகின்றனர். ஈழத்தமிழரது மனித உரிமைக்கும் மனிதாபிமானத்திற்கும் சுயநிர்ணயத்திற்கும் சுயாட்சிக்கும் சீனா ஆதரவு வழங்குமாயின், ஈழத்தமிழருடனான உறவு சிறப்பானதாக அமையும். அதற்கான வெளிப்பாடுகளை சீனாவின் வெளியுறவுக் கொள்கையில் காட்டுமாயின் ஈழத்தமிழர் சீனாவுடன் நட்புறவு கொள்வதில் (22ம் பக்கம் பார்க்க)

# கிட்டாத வெற்றி!

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



கடந்த 2020ஆம் ஆண்டு இந்தியாவுக்கான உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்ட மிலிந்த மொரகொட, நீண்ட இடைவெளிக்குப் பின்னரே, பதவியைப் பொறுப்பேற்றிருந்தார். பதவியை பொறுப்பேற்கும் போது கையில் கூடவே ஒரு ஆவணத்தையும் கொண்டு சென்றார்.

ஒவ்வொரு தலைவரையும் சந்திக்கும் போது அதனை கையளித்தார். மிலிந்த மொரகொட பதவியை ஏற்றுக் கொள்வதற்கு முன்னர், புதுடில்லியில் உள்ள இலங்கைத் உயர்ஸ்தானி கரகத்துடன் இணைந்து அவரது வழிகாட்டலில் தயாரிக்கப்பட்ட ஆவணம் தான் அது.

2021 –2023இல் இந்தியாவில் உள்ள இலங்கை இராஜதந்திர பணியகங்களுக்கான ஒருங்கிணைந்த நாட்டு மூலோபாயம் என்பது தான் அந்த ஆவணத்தின் தலைப்பு.

2021 ஜீலையில் தயாரிக்கப்பட்ட அந்த ஆவணம், அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கான இந்திய இலங்கை உறவுகளை எவ்வாறு பலப்படுத்தலாம் என்பதை அடிப்படையாக கொண்டிருந்தது.

2015 ஜனாதிபதி தேர்தலில் இந்தியப் புலனாய்வுத் துறையின் தலையீட்டினால் தான், தாங்கள் தோற்கடிக்கப்பட்டதாக ராஜபக்ஷவினர் பகிரங்கமாக பிரசாரம் செய்து, இந்தியாவுடன் இராஜதந்திர இடைவெளியை உருவாக்கிக் கொண்டிருந்த நிலையில், அந்த இடைவெளியை நிரப்ப வேண்டிய பொறுப்பு, மிலிந்த மொரகொடவுக்கு வழங்கப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு மூலோபாய ஆவணத்தை தயாரித்துக் கொண்டு, வெளிநாட்டு உயர்ஸ்தானிகர் பதவியை ஏற்றுக்கொண்ட ஒரே நபராக மிலிந்த மொரகொடவாகத் தான் இருப்பார். சுயமாக துறைசார் இராஜதந்திரிகள் உயர்ஸ்தானிகர்களாக நியமிக்கப்படும் போது, நிலைமைகளை கையாளும் திறன் பெற்றவர்களாக இருப்பார்கள். ஆனால் துறைசார் இராஜதந்திரிகள் அல்லாத அரசியல் ரீதியாக நியமிக்கப்படும் உயர்ஸ்தானிகர்களுக்கு அரசியல் இலக்குகள் இருந்தாலும், அதனை அணுகுகின்ற அடிப்படைகள் இருக்காது.

இவ்வாறான இடைவெளியை சமாளிக்கும் உத்தியாகவே, மிலிந்த மொரகொட, ஒரு வழிவரைபடத்துடன் புதுடில்லியில் சென்று இறங்கியிருந்தார். அந்த வழிவரைபடம் ஏழு முக்கியமான இலக்குகளை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்டிருந்தது. அதில் முதலாவது இலக்கு, அரசியல் மட்டத்திலான தொடர்புகளை அதிகரிப்பதன் மூலம் தற்போதுள்ள நெருங்கிய இரு தரப்பு உறவை ஒரு மூலோபாய நிலைக்கு உயர்த்துவதாகும்.

அதற்காக மிலிந்த மொரகொட பரிந்துரைத்த முதல் விடயம், 'இரு நாடுகளுக்கும் இடையே உயர்மட்ட அரசியல் பயணங்களை தொடர்ந்து பரிமாறிக் கொள்வதன் மூலம் இரு தரப்பு மற்றும் பலதரப்பு உறவை வலுப்படுத்துதல் மற்றும் பிராந்திய அளவில் இந்தியாவுடன் ஒத்துழைப்பை மேம்படுத்துதல்.

இதன்படி, ஒவ்வொரு ஆண்டும் இரு நாடுகளின் தலைவர்களும், உயர்மட்ட பயணங்களை மேற்கொள்ள வேண்டும். இந்தியப் பிரதமர் இலங்கைக்கும், இலங்கை ஜனாதி பதி மற்றும் பிரதமர் இந்தியாவுக்கும் ஒவ்வொரு வருடமும் பயணங்களை மேற்கொள்வது. இரண்டு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களும் பயணங்களை மேற்கொள்வது. அமைச்சர்கள் நேரடிப் பயணமாக இல்லா விட்டாலும் மெய்நிகர் வழியில் கிரமமான முறையில் சந்தித்துக் கொள்வது. அடுத்தடுத்த மட்டங்களில் தொடர்புகளை பேணுகின்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பது. இப்படி ஒரு திட்டத்தை அந்த



வழி வரைபடத்தில் தயாரித்திருந்தார் மிலிந்த மொரகொட.

புதுடில்லியில் அவர் கடமைகளைப் பொறுப்பேற்றது தொடக்கம், இந்திய தலைவர்கள், அமைச்சர்கள், இராஜதந்திரிகளுடன் கிரமமான உறவுகளை பேணி வருகிறார். ஆனால், நாடுகளுக்கிடையிலான உறவு என்று வரும் போது, அவரது இலக்கின் முதல் அடியைக் கூட எடுத்து வைக்கவில்லை.

2021 –23 வரையான காலப்பகுதியை இலக்கு வைத்தே அந்த வழி வரைபடம் தயாரிக்கப்பட்டது. இப்போது, 2023ஆம் ஆண்டு தொடங்கி விட்டது. எனினும், 2019இற்குப் பின்னர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவில்லை.

2022 நடுப்பகுதியில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்கவினால் இன்னமும் புதுடில் லிக்குப் பயணம் மேற்கொள்ளவோ, இந்தியப் பிரதமருடன் இருதரப்பு பேச்சுக்களை நடத்தவோ முடியவில்லை. வெளிவிவகார அமைச்சர்கள் மட்டத்திலான பயணங்கள், சந்திப்புகள் இடம்பெற்றாலும் ஆண்டு தோறும், இரண்டு நாடுகளின் தலைவர்கள் பயணங்களை மேற்கொள்ளும் திட்டம் முற்றாகவே தோல்வியடைந்திருக்கிறது.

குறிப்பாக ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்த பின்னர், நிலைமைகள் முற்றாக மாற்றமடையும் என்ற எதிர்பார்ப்பு பரவலாக காணப்பட்டது. ராஜபக்ஷவினர் அவ்வாறானதொரு எதிர்பார்ப்பில் தான், ரணில் விக்கிரமசிங்கவை தங்களின் தெரிவாக முன்னிறுத்தினார்கள். ஆனாலும், அவரால் கூட புதுடில்லியின் கதவுகளைக் கடந்து செல்ல முடியாமல் இருக்கிறது. இலங்கையின் ஜனாதிபதியாகப் பதவியேற்று ஆறு மாதங்களாகின்ற நிலையிலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை புதுடில்லி அழைக்கவில்லை.

இது ஆச்சரியமானதொரு அணுகுமுறை. இந்த இடைவெளியை உருவாக்கி விட்டது சீனா தான் என்பதில் சந்தேகம் இல்லை. இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கிய போது. 3.8 பில்லியன் டொலர்கள் உதவிகளை வழங்கி யது இந்தியா, சீனா உள்ளிட்ட மற்றைய நாடுகள் எல்லாம் ஓடிப் பதுங்கிய போது, இந்தியா மட்டும் வாரி வழங்கியது. ஆனால், அதற்கும் அரசியல் ரீதியான அணுகுமுறைக்கும் தெளிவானதொரு கோட்டை புதுடில்லி வரைந்து வைத்திருக்கிறது.

மனிதாபிமான உதவிகள் தேவைப்படும் போது உதவிய இந்தியா, அரசியல் தலைவர்களை கையாளும் முறைகளில் எந்த மாற்றத்தையும் செய்யவில்லை. ரணில் விக்கிரமசிங்க இந்தியாவின் நம்பிக்கையைப் பெற்ற ஒருவராகத் தான் இருந்தார்.

2001இல் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்த போது இந்தியாவின் ஆதரவையும், பங்களிப்புகளையும் அவர் பெற்றிருந்தார். பேச்சுக்கள் தொடர்பான முழு விபரங்களும் உடனுக்குடன் இந்தியாவுக்குப் பகிரப்பட்டது. ஆட்சியில் இல்லாத காலகட்டத்திலும், ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வந்தவர்.

அந்த வகையில் அவர் புதுடெல்லியின் நம்பிக்கையைப் பெற்றவராக புதுடில்லியுடன் நெருங்கிய உறவுகளைப் பேணுபவராக இருப்பார் என்றே நம்பப்பட்டது. ராஜபக்ஷவினர் காலத்தில் ஏற்பட்ட இடைவெளியை அவர் நீக்குவார் என்றும் நம்பப்பட்டது. ஆனால், கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முன்னர், சீனாவின் யுவான் வாங்5 என்ற செய்மதி மற்றும் ஏவுகணை வழித்தட கண்காணிப்புக் கப்பலுக்கு அனுமதி கொடுத்து விட்டு சென்றதால் எல்லாமே குழம்பிப் போனது. அந்தக் கப்பலின் வருகைக்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவிக்க, அதனைத் தட்டிக் கழிக்க முடியாமல் ரணில் விக்கிரமசிங்க திணறினார். கடைசியாக, முன்னைய அரசாங்கத்தினால் ஒப்புதல் வழங்கப்பட்டு விட்டதை சுட்டிக்காட்டி இந்தியாவின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

சீனக் கப்பல் அம்பாந்தோட்டையில் தரித்துச் சென்ற பின்னர் எல்லாமே மாறி விட்டது. இலங்கையை நம்ப முடியாது என்ற முடிவுக்கு இந்தியா கிட்டத்தட்ட வந்து விட்டது. இந்த நிலையை சரி செய்வதற்கு கடந்த நான்கு மாதங்களாக மிலிந்த மொரகொட மேற்கொண்ட முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

பாதுகாப்பு ரீதியான சவால்களை சமாளிக்க இரண்டு தரப்புகளும் பொதுவான பொறிமுறை ஒன்றை வகுக்க வேண்டும் என்று மிலிந்த மொரகொட கூறியிருந்தார். அவர் இந்தியாவினது பாதுகாப்பையும், இலங்கையின் பாதுகாப்பையும் வேறுபடுத்திப் பார்க்கவில்லை. ஒன்றின் பாதுகாப்புக்கு ஏற்படும் பாதிப்பு இன்னொன்றின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்பது அவரது கருத்து. ஆனாலும், அந்த கூட்டுப் பொறிமுறை இன்னமும் உருவாக்கப்படவில்லை. அதற்கான பேச்சுக்களும் முன்னெடுக்கப்படவில்லை.

காரணம் அரசியல் உயர்மட்டங்களில் காணப்படும் தேக்கநிலை தான். இந்த தேக்க நிலையை போக்கும் முயற்சிகளில் மிலிந்த மொரகொடவினால் இது வரை வெற்றியைப் பெற முடியவில்லை. அந்த தேக்க நிலையை போக்காமல் அவர் திட்ட மிட்டது போன்ற இரு தரப்பு உறவுகளை பலப்படுத்திக் கொள்ள முடியாது..

## 29வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு தம்பையா செல்லத்துரை

கட்டுவன் மேற்கு யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு தம்பையா செல்லத்துரை அவர்களின் 29வது ஆண்டு நினைவு நாள் 07 ஜனவரி 2023 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு தம்பையா செல்லத்துரை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 45வது ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் திரு சின்னப்பு நல்லையா

யாழ்ப்பாணம் ஊரெழு கிழக்கு ஊரெழுவைச் சேர்ந்த அமரர் உயர் திரு சின்னப்பு நல்லையா அவர்களது 45வது ஆண்டு நினைவு நாள் 09 ஜனவரி 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் திரு சின்னப்பு நல்லையா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 2வது ஆண்டு நினைவஞ்சலி





### திரு கந்தையா ஆழ்வாப்பிள்ளை

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு கந்தையா ஆழ்வாப்பிள்ளை அவர்களின் இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 10 ஜனவரி 2023 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு கந்தையா ஆழ்வாப்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?


மேடராசி அன்பர்களே! வீண் செலவுகளை குறைப்பது நல்லது. ராசிக்கு 4ல் ராசிநாதன் சுக்கிரன் இருப்பது நன்மை தரும். எந்த ஒரு வேலையையும் செய்யும் முன் அதில் உள்ள நல்லது கெட்டதை ஆராய்ந்து செய்வது நல்லது. பயன் தராத முயற்சிகளை தவிர்ப்பது நன்மை தரும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் மிகவும் சாமர்த்தியமாக செயல்படுவது நன்மை தரும். தொழில் போட்டிகள் உண்டாகலாம்.


ரிஸபராசி அன்பர்களே! எந்த நிலையிலும் தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். எதிலும் முன்னேற்றம் காண முடியும். எடுத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். வெளியூர் பயணங்கள் சாதகமான பலன் தரும். தொழில் வியாபாரம் மூலம் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். தொழில் வியாபார வளர்ச்சிக்கு தேவையான ஆதரவு கிடைக்கும்.மதிப்பும் மரியாதையும் கிடைக்க பெறுவீர்கள்


மிதுனராசி அன்பர்களே! திட்டமிட்டு எந்த காரியத்தையும் செய்வீர்கள். எந்த இடத்தில் பேசும்போதும் கவனமாக பேசுவது நல்லது. வாக்குறுதிகளை கொடுப்பதை தவிர்ப்பது நன்மை தரும். விருப்பத்திற்கு மாறாக காரியங்கள் நடக்கலாம். மனம் தளராமல் இருப்பது நல்லது. வீண் ஆசைகள் தோன்றலாம். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் பார்ட்னர்களை அனுசரித்து செல்வது வியாபார வளர்ச்சிக்கு உதவும்.


கடகராசி அன்பர்களே! மனதில் தைரியம் அதிகரிக்கும். வீட்டிலும் வெளியிலும் உங்களது செயல்களுக்கு ஆதரவு கிடைக்கும். ராசியில் சனி இருப்பதால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொழில் வியாபாரம் திருப்தியாக நடக்கும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். வாடிக்கையாளர்கள் மத்தியில் மதிப்பு கூடும். உத்யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். வேலை தேடுபவர்களுக்கு புதிய வேலை கிடைக்கும்.



சிங்கராசி அன்பர்களே! திறமையை வெளிப்படுத்தி வெற்றி பெறுவீர்கள். எதிர்ப்புகள் விலகும். எதிலும் உடனடியாக முடிவு எடுக்க முடியாத நிலை ஏற்படும். மற்றவர்கள் மத்தியில் உங்களது பேச்சுக்கு முக்கியத்துவம் இருக்காது. அறிவுரைகள் கூறுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் சில சிக்கலான கட்டங்களை சந்திக்க நேரிடும். முடிவில் எதிர்பார்த்தபடி சாதகமான பலன் உண்டு



கன்னிராசி அன்பர்களே! கடின உழைப்பினால் வெற்றி பெறுவீர்கள். வீண் செலவு குறையும். எதிலும் அவசர முடிவு எடுப்பதை தவிர்ப்பது நல்லது. எதையும் ஆக்கபூர்வமாக செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். மன தெளிவு உண்டாகும். திடீர் இடமாற்றம் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் சாமர்த்தியமாக செயல்பட்டு வெற்றி காண்பார்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் திறமையாக செயல்படுவார்கள்.



துலாம்ராசி அன்பர்களே! வீண் கவலைகள் நீங்கும். சுபச்செலவு அதிகரிக்கும். ராசிக்கு 10ல் சஞ்சாரம் செய்யும் சுக்கிரன் இடமாற்றத்தை ஏற்படுத்துவார். எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படலாம். வார தொடக்கத்தில் அடுத்தவருக்கு உதவபோய் வீண் பிரச்னையில் சிக்கிக் கொள்ள நேரலாம். புதிய நட்பு உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் போட்டிகளை சந்திக்க வேண்டி இருக்கும். வியாபாரம் தொடர்பான அலைச்சலும் புதிய ஆர்டர் பற்றிய கவலையும் ஏற்படும்.


விருசிசிகராசி அன்பர்களே! மனதில் எண்ணியதை எப்பாடுபட்டாவது செயல்படுத்துவீர்கள். மற்றவர்களுடன் வீண்பகை விலகும். அடுத்தவரின் செயல்கள் உங்கள் கோபத்தை தூண்டுவதாக இருக்கலாம் அனுசரித்து செல்வது நன்மை தரும். தொழில் வியாபாரத்தில் மெத்தனப் போக்கு காணப்படும். தொழில் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது வியாபார வெற்றிக்கு உதவும்.




தனுசுராசி அன்பர்களே! எதையும் சுலபமாக புரிந்த கொண்டு செயல்படுவீர்கள். ராசியாதிபதி புதன் ஏழாமிட சஞ்சாரம் நல்ல மாற்றத்தை கொடுக்கும். ஏதாவது ஒரு வகையில் மனகுழப்பம் ஏற்பட்டு நீங்கும். சாதாரணமாக பேசப்போக அது சண்டையாக மாறலாம். வேளை தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். பொருட்களை கவனமாக பார்த்துக் கொள்வது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பாக அலைச்சல் ஏற்படும்.


மகரராசி அன்பர்களே! செய்யும் காரியத்தில் மனதிருப்தி கிடைக்கும். அடுத்தவர்களுக்காக எந்த பொறுப்பையும் ஏற்காமல் இருப்பது நல்லது. மற்றவர்களுக்காக வீண் அலைச்சல், செலவு செய்ய வேண்டி இருக்கும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடந்தாலும் எதிர்பார்த்த லாபம் குறையலாம். வியாபாரம் தொடர்பான பணம் பரிவர்த்தனையில் கவனம் தேவை. உத்யோகத்தில் இருப்பவர்கள் எதிர்பார்த்த பலன் கிடைப்பதில் தாமதம் உண்டாகும்..


கும்பராசி அன்பர்களே! மனதில் இருந்த டென்ஷன் குறையும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். விரும்பிய படி காரியங்கள் நடக்கும். நீண்ட தூர தகவல்கள் நல்ல தகவல்களாக இருக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் காணப்படும். லாபம் எதிர்பார்த்தபடி இருக்கும். புதிய வாடிக்கையாளர்கள் ஏற்படுவதுடன் அவர்களால் நன்மையும் உண்டாகும். வேலைகளுக்கு பாராட்டும் பண உதவியும் கிடைக்கலாம்.


மீனராசி அன்பர்களே! எதிர்பார்த்த நல்ல பலன்கள் அனைத்தும் கிடைக்கும். திறமையான பேச்சின் மூலம் காரியங்களை சாதிப்பீர்கள். எதிர்த்து செயல்பட்டவர்கள் விலகிச் சென்று விடுவார்கள். தெய்வ பிரார்த்தனை மனதுக்கு நிம்மதியையும், ஆறுதலையும் தரும். சூரியன் சஞ்சாரத்தால் பண வரத்து கூடும். அரசாங்க காரியங்கள் சாதகமாக பலன் தரும். தொழில் வியாபாரம் லாபகரமாக நடக்கும். தொழில் விரிவாக்கத் திட்டங்கள் செயல்படுத்துவீர்கள்

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

## அமெரிக்கா செல்ல முடியாத நிலை கோத்தபாயவுக்கு...

(19ம் பக்கத் தொடர்ச்சி) வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். இப்போதும் இராஜதந்திரப் பதவி ஒன்றைப் பெற்றுக் கொண்டு அமெரிக்கா சென்றுவிடுவதற்கு கோட்டா திட்டமிட்ட போதிலும் உள்வீட்டுக் குழப்பங்களால் அதுவும் சாத்தியமாகாமல் போய் விட்டதான அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. ரணிலும் அது தனக்கு பாதகமாகலாம் என்ப தால் அதனை மறுத்து விட்டதாகவும் தகவல்கள் உள்ளன.

## வடக்கு மாகாணத்தில் களமிறக்கப்பட்டுள்ள

(20ம் பக்கத் தொடர்ச்சி) பின் நிற்கமாட்டார்கள். ஆனால் இரும்புத்திரை அரசியலை தனது நாட்டுக்குள் வைத்துக் கொண்டு உலகம் முழுவதும் முதலாளித்துவத்தில் பயணம் செய்து கொண்டு பொருளாதாரத்தையே பிரதான இலக்காகக் கொண்டு செயல்படுவதென்பது, ஈழத்தமிழருக்கான அரசியலுக்கான தீர்வைத் தந்து விடாது. ஈழத் தமிழர் தேசியப் பிரச்சினை என்பது பொருளாதார அபிவிருத்தியால் தீர்ந்து விடாது. மாறாக அரசியல் அபிலாசையால் கட்டமைக்கப்படும் பொருளாதார விருத்தியாகவே அமைய வேண்டும். ஈழத்தமிழரது அரசியல் தீர்வு சாத்திய மானால் பொருளாதார விருத்தியை இயல்பாகவே கட்டமைக்கும் திறனுடையவர்கள்.

## இணைந்த வடக்கு கிழக்கில்

(3ம் பக்கத் தொடர்ச்சி) நேரடியாகத் தொலைபேசி மூலம் அழைப்பு விடுத்துள்ளார். இனப் பிரச்சினை தீர்வுக்கான பேச்சு எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது. இந்தப் பேச்சு தொடர்பான முன்னாயத்த நடவடிக்கையாகவே இந்தச் சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மாலை 5.00 மணிக்கு நடைபெற்றது.. சர்வகட்சி சந்திப்பின் பின்னர் கடந்த டிசம்பர் 21ஆம் திகதி தமிழ்த் தேசியத் தரப்பு கட்சிகளை ஜனாதிபதி சந்தித்தார். இந்தச் சந்திப்புக்கான அழைப்பைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான புளொட், ரெலோவுக்கும் மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் எம்.பிக்கும் சுமந்திரன் எம். பியே விடுத்தார்.

போதிய அவகாசம் இல்லாத அதேசமயம், தமக்கு ஜனாதிபதியால் உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுக்கப்படாதது குறித்து விக்னேஸ்வரன் எம்.பி. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்குக் கடிதம் ஒன்றை எழுதியிருந்தார்.

இந்த நிலையிலேயே நேற்றைய சந்திப்புக்குத் தமிழ்த் தேசிய கட்சிகளின் சகல தலைவர்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே நேரடியாக அழைப்பை விடுத்துள்ளார்.

நேற்றைய சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், எம். ஏ. சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் பங்குபற்றுவர். சி.வி. விக்னேஸ்வரன் இந்தியா சென்றுள்ளமையால் இந்தச் சந்திப்பில் பங்கேற்கவில்லை என்று அறிய முடிகின்றது.

இதேவேளை,நேற்றைய சந்திப்பில் அரச தரப்பில் ஜனாதிபதியுடன் அமைச்சர்களான அலி சப்ரி, விஜயதாஸ ராஜபக்ச, டக்ளஸ் தேவானந்தா ஆகியோரும் பங்கேற்றனர்.

இச்சந்திப்பு தொடர்பான மேலதிக விபரங்களும் செய்திக் கட்டுரைகளும் அடுத்த வாரம் வெளிவரும்.


சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial*
- *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com



மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க...
விற்க...
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6




RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)




மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca
KABIS
• Life Insurance
• Critical Illness
• Disability
• RESP
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life




OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*




RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500




உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.